RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE BUYING - SELLING - LEASE - PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
jeya.sivasothy@aaxelinsurance.com www.aaxelinsurance.com
AAXEL

மலர்:- 29, 22 யூலை 2022 இதழ்:- 13

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

BASKARAN
SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE REALTY INC BROKERAGE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

## இலங்கையின் 8வது ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கா தெரிவானார்!

இலங்கை வரலாற்றில் முதன் முறையாக பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்களிப்பின் ஊடாக ரணில் விக்கிரமசிங்க 8 ஆவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவின் பதவி விலகலையடுத்து ஜனாதிபதி பதவியில் ஏற்பட்ட வெற்றிடத்திற்காக பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர் டலஸ் அழகப்பெரும ஆகியோர் (3ம் 7ம் பக்கம் பார்க்க)



Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
office@nishanthanlaw.onmicrosoft.com
Fax 1-800-878-1348
www.nishanthanlaw.com

## அரசியல் யதார்த்தம் தெரியாமல் கூட்டமைப்பு வரலாற்றுத் தவறு!

அரசியல் நடப்பைப் புரிந்து கொண்டு மக்களுக்கு பயன் தரத்தக்க நிலைப்பாட்டில் தலைமைத்துவம் உறுதியாக நிற்க வேண்டும். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவம் வரலாற்று தவறி ழைத்து விட்டது என்று ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா தெரிவித்துள்ளார். அத்துடன் பொறுப்புக்களை கடந்து செல்லாமல் மத்திய குழுவைக் கூட்டி நடந்த தவறுகள் தப்புகளுக்கான காரணங்களை ஆராய்வது மட்டுமின்றி பொறுப்புக் கூற வேண்டியதும் மிகவும் இன்றியமையாதது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (5ம்பக்கம்)



GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins Manulife Foresters

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## போராட்டக்காரர்களை அம்பலப்படுத்திய விமல் வீரவன்ச



ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை சுற்றி வளைக்கப்பட்டதன் பின்னரும் அதற்கு முன்னர் ஜனாதிபதி இராஜினாமா செய்ய வேண்டுமென நாங்கள் கூறவில்லை ஏன்? எனக் கேள்வியெழுப்பிய தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் எம்.பியுமான விமல் வீரவன்ச, அந்தப் பதவியில் இருப்பவர் அப்படியே விலகி விட்டால். அதனை விடவும் மோசமானவரைக் கொண்டு அப்பதவியை நிரப்ப முடியும் என்பதனால் ஆகும் என்றார். (7ம் பக்கம் பார்க்க)

## இந்தியாவுக்கு அருகில் கிளர்ச்சியா?

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

**போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!**
**உறவுகளே! யூலை மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!**

BUY/SELL HOUSES
ARUL
THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

“ஒரு முகவர் இரு சேவைகள்”
“One Broker Two Services”
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial




## Team SIVA WILL BRING THE BEST RESULTS!

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



HOMELIFE HIGHER STANDARDS


*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
**Bus: 416.298.3200**
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Central Park / Bramalea

**Brampton** 674,900
Bedrooms: 3 Washrooms: 2
Lots Of Upgrades, Neutrally Painted

### Park Rd / Wentworth

**Oshawa** $499,000
Bedrooms: 3+1 Washrooms: 2
Well Maintained Complex


### Kennedy & Progress


**Scarborough** $548,000
Bedrooms: 2 Washrooms: 1
Ground Floor Unit, Great Location


### Eglinton/Markham

**Scarborough** $624,900
Bedrooms: 2 Washrooms: 2
Open Concept, Very Large Rooms

### Lawrence/ Galloway

**Toronto** $499,900
Bedrooms: 4 Washrooms: 2
New Hardwood Floors Throughout

### Mccowan/401

**Scarborough** $589,900
Bedrooms: 1+1 Washrooms: 1
Newly Renovated ,Open Concept

### Kennedy/401

**Scarborough** $599,900
Bedrooms: 1 Washrooms: 1
Close To High Way, Shopping Plaza


### Dixie/Clark

**Brampton** $629,900
Bedrooms: 3 Washrooms: 2
Upgraded & Spacious Corner Unit

### Eglinton/Markham

**Scarborough** $699,999
Bedrooms: 3 Washrooms: 2
Renovated & Low Maintenance Free

### Yonge/Davis

**Newmarket** $1,699,000
Bedrooms:4+1 Washrooms: 5
Over 4000 Sq Ft

### Hwy 7/ Leslie

**Markham** $649,900
Bedrooms: 3+1 Washrooms: 3
Open Concept, Newer Paint

### Don Mills/Eglinton



**Scarborough** $549,900
Bedrooms: 3 Washrooms: 2
Location! Location! Location!

### Donald Cousens Pkwy / 16th Ave

**Markham** $1,499,999
Bedrooms: 4+2 Washrooms: 4
Approx. 2520 Sq Ft

### Meadowvale & Ellesmere

**Scarborough** $1,699,000
Bedrooms: 4 Washrooms: 4
$$$$ On Upgrades

### Brimorton/ Scar. Golf


**Scarborough** $1,100
Bedrooms: 1 Washrooms: 1
Basement Apartment for Rent

### Major Mack/Mccowan


**Markham** $2,900
Bedrooms: 4 Washrooms: 3
Throughout Hardwood Floor

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

# இலங்கையின் 8வது ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கா தெரிவானார்!



இலங்கை வரலாற்றில் முதன்முறையாக பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்க ளிப்பின் ஊடாக ரணில் விக்கிரமசிங்க 8 ஆவது நிறைவேற்றதிகார ஜனாதிபதி யாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவின் பதவி விலகலையடுத்து ஜனாதிபதி பதவியில் ஏற்பட்ட வெற்றிட த்திற்காக பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. ஜே.வி.பி. தலைவர் அநுர குமார திஸாநாயக்க மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர் டலஸ் அழகப்பெரும ஆகி யோர் வேட்பாளர்களாகக் களமிறங்கினர்.

ஜனாதிபதி தெரிவிற்கான வேட்புமனு தாக்கல் 19 யூலை 2022 செவ்வாய் கிழமை இடம் பெற்ற நிலையில் மறு நாள் 20 யூலை 2022 புதன்கிழமை முற்பகல் 10.20க்கு அதற்கான வாக்களிப் பும் ஆரம்பமானது. வாக்களிப்பு ஆரம்ப மானதையடுத்து முதலாவது வாக்கினை சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்தன பதிவு செய்தார். இரண்டாவது வாக் கினை பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க பதிவு செய்தார்.

தொடர்ந்து 22 ஆவதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தனது வாக்கினை பதிவு செய்ததோடு வேட் பாளர்களான டலஸ் அழகப்பெரும மற் றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் முறையே 42 ஆவதாகவும் , 99 ஆவதாகவும் தத்தமது வாக்கு களைப் பதிவு செய்ததனர். தொடர்ந்து 167ஆவதாக முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வாக்குப் பதிவு செய்த அதே வேளை 205 ஆவதாக முன்னாள் ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன வாக்கு பதிவு செய்தார்.

சபை அமர்வில் கலந்து கொண்ட வர்களில் அகில இலங்கை தமிழ் காங்ர ஸின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோரை தவிர ஏனைய அனைவரும் வாக்களிப் பில் கலந்து கொண்டனர்.

இவ்வாறு சுமார் ஒன்றரை மணித்தியால ங்கள் இடம் பெற்ற வாக்குபதிவு முற் பகல் 11.50 க்கு நிறைவடைந்தது. அதன் பின்னர் வாக்கெண்ணும் பணிகள் சுமார் 45 நிமிடங்கள் முன்னெடுக்கப் பட்டன. இதன் போது ரணில் விக்கிரம சிங்கவின் வாக்குகள் எண்ணப்படுவதை கண்காணிப்பதற்காக ஹரின் பெர்னாண் டோவும் டலஸ் அழகப்பெருமவின் வாக்குகள் எண்ணப்படுவதை கண் காணிப்பதற்காக டிலான் பெரேராவும் , அநுரகுமார திஸாநாயக்கவின் வாக்கு கள் எண்ணப்படுவதை கண்காணிப்ப தற்காக விஜித ஹேரத்தும் நியமிக்கப்பட் டனர்.

வாக்கெண்ணும் பணிகள் நிறைவடை ந்த பின்னர் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால் முடிவுகள் அறிவிக்கப் பட்டன. அவரால் அறிவிக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் அளிக்கப் பட்ட 223 வாக்குகளில் 219 செல்லுபடி யாக வாக்குகள் என்பதோடு .4 செல்லு படியற்ற வாக்குகளாகும். அதற்கமைய செல்லுபடியான 219 வாக்குகளில் . 134 வாக்குகளைப் பெற்று ரணில் விக்கிரம சிங்க இடைக்கால ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

இதே வேளை தேர்தலில் களமிறங்கிய ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸா நாயக்க 3 வாக்குகளைப் பெற்றுக் கொண்ட அதே வேளை சக வேட்பாள ரான டலஸ் அழகப்பெரும 82 வாக்கு களைப் பெற்றுக் கொண்டார்.

1993 மே தினத்தன்று அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச கொலை செய்யப்பட்டதையடுத்து அன்றைய தினமே பதில் ஜனாதிபதியாக டிக்கிரி பண்டார விஜேதுங்க பதவி பிரமாணம் செய்து கொண்டார். அதன் பின்னர் 1993 மே 7 ஆம் திகதி பாராளுமன்றத்தில் ஏகமனதாக இடைக்கால ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

அன்று வேறு டி.பி.விஜேதுங்கவை தவிர வேறு வேட்பாளர்கள் தேர்தலில் களமிறங் காமையால் வாக்கெடுப்பின்றி அவர் இடைக்கால ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். ஆனால் இம்முறை 3 வேட்பாளர்கள் களமிறங்கியமையால் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பின் மூலம் இடைக்கால ஜனாதிபதி தெரிவு செய்யப் பட்டார்.

இதன் காரணமாகவே இலங்கை அரசி யல் வரலாற்றில் பாராளுமன்ற உறுப் பினர்களின் வாக்குகளின் ஊடாக இடை க்கால ஜனாதிபதி தெரிவு இடம் பெற்ற முதலாவது சந்தர்ப்பமாக இது பதிவாகி யுள்ளமை விசேட அம்சமாகும்.

இலங்கை அரசியல் வரலாற்றில், தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்திற்கு தெரிவாகி, பிரதமராக நியமிக்கப்பட்டு பதில் அதிபராக பதவியேற்று தற்போது இடைக்கால அதிபராக அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்ற வாக்கெடுப்பு ஆரம்பிக்கும் வரை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் ஈழ மக்கள் ஜனநாய கட்சி மற்றும் பொதுஜன பெரமுன மாத்திரமே வெளிப்படையாக ரணிலுக்கே வாக்கு என கூறியிருந்தந்தன.

ஆனால் டலஸ் அழகப்பெருமவுக்கே ஆதரவு என பல கட்சிகளில் இருந்து அறிவிப்பு வெளியாகி இருந்தது அத னால் டலஸ்க்கே வெற்றி வாய்ப்பு அதிகம் என பேசப்பட்டு வந்தது. இந்நிலையில் இறுதி நேர முடிவுகள் தலை கீழாக மாறி அதிக வாக்குகளை ரணில் பெற்றிருக்கின்றமை குறிப்பிடத் தக்கது.

## சுமந்திரன் கருத்து

நாடாளுமன்றில் நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தெரிவிற்கான வாக்கெடுப்பில் ரணில் விக்ரமசிங்க வெற்றி பெற்றமை தொடர்பில், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ருவிட்டரில் பதிவொ ன்றை இட்டு. அதில் நாடாளுமன்றத்தை உடனடியாகக் கலைக்குமாறு கோரி யுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திர னின் ருவிட்டர் பதிவில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. நாடாளுமன்றம் இன்னும் பொதுஜன பெரமுனவின் பிடி யில் உள்ளது என்பதை நிரூபிக்கப் பட்டுள்ளது. அது தனது ஆணையை இழந்து விட்டது. நாடாளுமன்றம் கலைக்கப்பட வேண்டும் என்று நான் மீண்டும் கூறுகின்றேன்.

அனுரகுமார திசாநாயக்க நல்ல ஒரு கருத்தை முன்வைத்துள்ளார். அதாவது டளஸ் அழகப்பெருமவுக்கு பகிரங்கமாக ஆதரவு தெரிவித்தவர்களின் எண்ணி க்கை 113க்கும் அதிகமாகும். அவ்வாறி ருக்கு இந்த வெற்றி எப்படி சாத்திய மானது? என பதிவிட்டுள்ளார்.

## ரணில் கருத்து

நாட்டின் எதிர்க்கட்சி உட்பட பாராளு மன்றத்தில் உள்ள அனைத்து கட்சி களும் ஒன்றிணைந்து செயற்படுவதற் காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கையின் 8 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதை அடுத்து பாராளுமன்றத்தில் விசேட உரையொ ன்றை நிகழ்த்திய போதே அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார்.

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

1 SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)

2 NEW OCEAN SUPER MARKET
5635 FINCH Ave
(MARKHAM / FINCH Ave)

3 AGP MART
4A WADE AVE
TORONTO

4 KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO

5 UTHAYA SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

Balachandran Law Office
Balachandran Muthaiah
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544




றொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

# ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin



ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்களில் மாற்றம் அடையலாம்

அம்பாள் அடியார்களே!

25 யூலை 2022 திங்கள்- பிரதோஷ விரதம்

27 யூலை 2022 புதன்- ஆடி அமாவாசை விரதம்

31 யூலை 2022- ஞாயிற்று ஆடிப்பூரம்

05 ஆகஸ்ட் 2022- திங்கள் வரலட்சுமி விரதம் (விளக்குப்பூஜை)

உபயம்:- சாரதா விமல்ராஜ் குடும்பம்

ஆடி அமாவாசையன்று காலை 7.00 மணியில் இருந்து ஆலயத்தில் பிதாவுக்கும் முன்னோர்க்கும் பிதிர்க்கடன் செய்தவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

**இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்**





# Amma Pawn Broker

# அம்மா தங்கநகை அடைவு மாடம்



கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்

1.0% முதல் 1.5% வரை

Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு

அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்



## அதிரடி சிறப்பு வட்டி வீதம்



உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்



- நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
- உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
- உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
- வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களிள் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
- எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்



அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!

105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8

ammapawnbroker@gmail.com

416-757-0034
416-994-3861

# அரசியல் யதார்த்தம் தெரியாமல் கூட்டமைப்பு வரலாற்றுத் தவறு!



அரசியல் நடப்பைப் புரிந்து கொண்டு மக்களுக்கு பயன்தரத்தக்க நிலைப்பாட்டில் தலைமைத்துவம் உறுதியாக நிற்க வேண்டும். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவம் வரலாற்று தவறிழைத்து விட்டது என்று ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா தெரிவித்துள்ளார். அத்துடன் பொறுப்புக்களை கடந்து செல்லாமல் மத்திய குழுவைக் கூட்டி நடந்த தவறுகள் தப்புகளுக்கான காரணங்களை ஆராய்வது மட்டுமின்றி பொறுப்புக் கூறவேண்டியதும் மிகவும் இன்றியமையாதது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஜனாதிபதி தெரிவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவளித்தது. ஆனால், பாராளுமன்றில் நடந்த வாக்கெடுப்பில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவானார். இதையடுத்து, அவர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

பாராளுமன்றத்தில் புதிய ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். பொதுவாக இது தான் நடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டநிலையில் ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க தேர்வுசெய்யப்பட்டமை ஆச்சரியமானதல்ல. ஆனால், இந்த முக்கியமான தருனத்தில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு வரலாற்றுத் தவறை மீண்டும் செய்துள்ளது.

மக்களின் எதிர்பார்ப்புகளையும் அபிலாசைகளையும் பொருட்படுத்தாது கூட்டமைப்பின் தலைமைத்துவம் அரசியல் ரீதியில் ஒரு சிலரின் நிகழ்ச்சி நிரலுக்குள் சிக்கியிருப்பது மிகவும் தெள்ளத் தெளிவானது. இலங்கை அரசியலில் பொறுப்புவாய்ந்த பதவியில் யார் அமரப் போகிறார் என்பதல்ல நமது விடயம். வரப் போகும் நபருடன் நமது பிரச்சனைகளைப் பேசித் தீர்ப்பதற்கான வழிமுறையொன்றைக் கண்டடைதல் தான் அரசியல் முதிர்ச்சி. அப்படிப்பட்ட முதிர்ச்சி கூட்டமைப்பின் தலைமைத்துவத்தின் நடவடிக்கையில் எந்தவோர் இடத்திலும் பிரதிபலிக்கவில்லை என்பது துரதிர்ஷ்டவசமானது.

சிறுபிள்ளைக்கும் விளங்கும் நடப்பு அரசியல் யதார்த்தம் கூட்டமைப்பின் தலைமைத்துவத்தால் புரிந்து கொள்ளப்படாத அதிசயத்தை என்னவென்று சொல்வது. எதிர்க்கட்சியில் அமர்ந்திருந்த தமிழ்த் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரினதும் வாக்குகள் இப்போது தமிழர் பிரச்னைக்குத் தீர்வுவொன்று குறித்துப் பேசமுடியாத நிலையில் வீணாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அரசியல் தலைமைத்துவம் என்பது காலத்தின் பொருத்தப்பாட்டை அறிந்து அரசியல் நடப்பைப் புரிந்து கொண்டு அதற்கேற்ற நிலையில் மக்களுக்குப் பயன் தரத்தக்க நிலைப்பாட்டில் உறுதியாக நிற்பதோடு தன்னோடு இணைந்து பயணிக்கும் அனைவரையும் அதே நிலைபபாட்டில் உறுதியோடும் திருப்தியோடும் நிலைத்திருக்கச் செய்வதாகும்.

ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவம் விட்டுள்ள இந்தத் தவறு, ரணிலின் ஆட்சிக் காலத்தில் இனி எந்தவொரு தீர்வுத் திட்டத்தையும் தமிழர்தரப்பு நெஞ்சை நிமிர்த்தி நின்று எதிர்பார்க்கவும் கேட்கவும் முடியாது செய்துள்ளது.

தவறான மதிப்பீடு மற்றும் தவறான வழிநடத்தல்களால் தமிழ்த் தேசிய இலக்கை அடைய முடியாத நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெறுவது முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும். இது தொடர்பான உபாயங்களை செதுக்கி தமிழர் அரசியல் இருப்பை உறுதிப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம். எனவே பொறுப்புக்களை கடந்து செல்லாமல் உடனடியாக மத்திய குழுவைக் கூட்டி நடந்த தவறுகளல்ல தப்புக்களுக்கான காரணங்களை ஆராய்வது மட்டுமின்றி பொறுப்புக்கூற வேண்டியதும் மிகவும் இன்றியமையாதது என்றுள்ளது.

# டலஸிற்கு வழங்கிய ஆதரவால் கூட்டமைப்பிற்குள் குழப்ப நிலை

புதிய ஜனாதிபதி தேர்வு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கள் குழப்ப நிலை நிலவுவதை பகிரங்கப்படுத்தியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவு நிலைப்பாட்டை எடுத்துள்ளதாக ஊடகங்களுக்கு எம்.ஏ.சுமந்திரன் அறிவித்திருந்தார்.

இந்நிலையில் அவர் அடுத்தநாள் தன்னுடைய சமூக வலைத்தளத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் சக உறுப்பினர்கள் முதுகெலும்பு உள்ளவர்களா? என்ற தொனிப்பட விமர்சிக்கப்பட்டுள்ளமை பலத்த கேள்விகளை எழுப்பியுள்ளது.

அந்தப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளமை வருமாறு: என்னைப் பொறுத்த வரையில் ஒரு கூட்டு தீர்மானம் எடுத்தால் அதன் பொறுப்புமுழுமையாக தீர்மானம் எடுத்த அத்தனை பேரையும் சாரும். அந்த பொறுப்பை எடுக்க மறுப்பவர்கள் முதுகெலும்பு இல்லாதவர்கள். அந்த பொறுப்பை நான் தனியே சுமக்க நேரிட்டாலும் அதற்கும் நான் தயார். எத்தனை பேருக்கு முதுகெலும்பு இருக்கிறது என்று பார்போம். என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கையில் உள்ள இந்தியபிரஜைகள் அண்மைய நிலைமை குறித்து எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியுள்ள அதேவேளை, தமது நகர்வுகள் மற்றும் நடவடிக்கைகளை திட்டமிடுமாறும் இலங்கைக்கான இந்திய தூதரகம் கோரிக்கை விடுத்துள்ளது.

தேவைப்படும் சந்தர்ப்பங்களில் தூதரகத்தை தொடர்பு கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்புக்கு அருகில் கடந்த திங்கள் இரவு மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இந்தியப் பிரஜையும் இந்திய விஸா நிலையப் பணிப்பாளருமான விவேக் வர்மா படுகாயமடைந்தார். இவ்வாறான நிலை யிலேயே இலங்கையில் உள்ள இந்தியப் பிரஜைகள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறுவுறுத்தப்பட்டுள்ளது.

# தமிழ்மக்களின் பொறுமை எதுவரையில்?

பொருளாதார நெருக்கடி சிங்களவர்களை வீதிக்குக் கொண்டு வந்தது. சிங்களவர்களால், நவீன துட்டகைமுவாகப் போற்றப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டை விட்டு வெளியேறும் நிலைமை உருவாகியது. சிங்களவக்ளின் கோபத்தை ஒரு கட்டத்துக்கு மேல் எதிர்கொள்ள முடியாததொரு சூழலில் தான், ராஜபக்ஷக்கள் அமைதியடைந்தனர். அந்த நேரத்தில், எதிர்கட்சித் தலைவரென்னும் வகையில் சஜித் பிரேமதாஸ நாட்டைப் பொறுப்பேற்றிருக்க வேண்டும். அவர் முன்வராத சூழலில் ரணில் விக்கிரமசிங்க அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். ரணில் விக்கிரம சிங்கவோ அல்லது வேறு எந்தவொரு சிங்கள அரசியல்வாதியோ, தமிழ் மக்களின் அனைத்து பிரச்னைகளையும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. இது தான் இது வரையான தமிழர் வரலாறு.

ஆனால் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஏனையவர்களுக்கும் இடையில் ஒரு வித்தியாசம் இருந்தது. அதாவது, ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அந்நியமானவரல்ல. ஏனெனில், கடந்த ஆட்சிக் காலத்தில் கூட்டமைப்பினர் – குறிப்பாக சம்பந்தனும் சுமந்திரனும் ரணிலோடு அரசியல் தேனிலவில் இருந்தனர். ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து புதியதோர் அரசியல் யாப்பை கொண்டுவரும் முயற்சியில், ஐந்து வருடங்களை செலவிட்டிருந்தனர். ஆனால், ரணில் பிரதமராக நியமிக்கப்பட்ட பின்னர் திடீரென்று சுமந்திரன், ரணில் எதிர்ப்பு பிரசாரமொன்றில் வெறித்தனமாக ஈடுபட்டார். அவர் ஏன் அவ்வாறு செய்கின்றார் என்னும் கேள்விக்குக் கூட்டமைப்பிலுள்ள எவரிடமும் பதிலில்லை. இவ்வாறானதொரு சூழலில் தான், கோட்டாபயவின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து, ரணில் ஜனாதிபதி ஆவதற்கான வாய்ப்புக்கள் உருவாகின.

ஆரம்பத்திலிருந்தே சுமந்திரனின் நிலைப்பாடு ரணிலை எதிர்ப்பதாக மட்டுமே இருந்தது. இதன் விளைவாக, முதலில் சஜித் பிரேமதாஸ பின்னர் டலஸ் அழகப்பெருமவை ஆதரிக்கும் சுமந்திரனின் நிலைப்பாடு, இறுதியில் கூட்டமைப்பின் நிலைப்பாடாக மாறியது. சுமந்திரன் கூட்டமைப்பின் பேச்சாளராக நியமிக்கப் பட்டதிலிருந்து, கூட்டமைப்பின் அனைத்து முடிவுகளிலும் சுமந்திரனின் மேலாதிக்கமே கோலோச்சியது. ஒரு கட்சியில், தனிநபர்களின் செல்வாக்கு தொடர்பில் நாம் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், முடிவுகள் மக்களின் நலனை கருத்தில் கொண்டு எடுக்கப்படுகின்றதா அல்லது தனிநபர்களின் சுயநலன்களிலிருந்து தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றனவா என்பதுதான் கேள்வி.

யுத்தத்துக்கு பின்னரான கடந்த பதின்மூன்று வருடங்களில் சம்பந்தன் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட எந்தவோர் அரசியல் தீர்மானங்களும் தமிழ்மக்களுக்கு நன்மைகளை கொண்டு வரவில்லை. 2015,ல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்துக்கு ஆதரவளித்தது சரியானது. ஆனால், அதன் பின்னர் கிடைத்த வாய்ப்புக்களை சரியாக பயன்படுத்தும் பொறிமுறையொன்றை சம்பந்தன் வகுக்கவில்லை. அது அனைத்தும் சுமந்திரனாலேயே திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப்பட்டது. அனைத்துமே புஸ்வாண மாகியது. சம்பந்தன் மற்றும் சுமந்திரனின் அரசியல் முடிவுகள் எப்போதுமே தவறுகளில்தான் முடிவுறும் என்பது, மீண்டுமொரு நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. இரண்டு தரப்புக்களுக்கிடையில் இடம் பெறும் போட்டியின் போது, நிலைமைகளை சரியாக ஆராயாமல் தீர்மானங்களை எடுக்கக்கூடாது. அரசியலில் இதுவொரு சாதாரண விடயம். ஆனால், இந்த சாதாரண விடயம் கூட சம்பந்தனுக்கும் சுமந்திரனுக்கும் விளங்கவில்லை.

2015இல் ஆட்சி மாற்றமொன்றை உந்தித் தள்ளியதில் இந்திய மற்றும் மேற்குலக நாடுகளின் ஆர்வங்கள் இருந்தன என்பதில் உண்மைகள் உண்டு. சீனசார்பு மகிந்த ராஜபக்ஷவின் வளர்ச்சியை பலரும் விரும்பியிருக்கவில்லை. ஆனால், 2015 ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர் இடம்பெற்ற விடயங்கள், வெறும் ஆட்சி மாற்றங்களால் மட்டும் விடயங்களை கையாள முடியாதென்னும் உண்மையை (8ம் பக்கம் பார்க்க)


Real Estate Law
Immigration Law
Wills and Estate
Power of attorney for personal care and property
Business Law

Notary Services
Statutory Declarations & Affidavits
Commissioning & Notarization

NISHANTHAN LAW OFFICE

Umananthini Nishanthan
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC



Phone : 416-289-9229

39 Devonshire Ave- Markham ON- L3S 3P2

# தமிழர் அபிலாசைகளை உள் வாங்குங்கள்! போராட்டக்காரர்களிடம் மனோகணேசன் கோரிக்கை!

நாட்டின் அரசியல் கலாசாரத்தினை மாற்றுவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இதை புறந்தள்ளி செயற்படுவது முறையானதல்ல. மீண்டும் பழைய பாதையிலேயே போக கூடாது என முன்னிலை சோஷலிச கட்சியின் பொது செயலாளர் குமார் குணரத்தினம் கூறுகிறார்.

இதுவே எமது கொள்கையாகவும் இருக்கிறது. இதனாலேயே நாம் எப்போதும் ராஜபக்ச அரசியல் கலாசாரத்தை எதிர்த்து வந்துள்ளோம். ஆனால் இந்த உத்தேச புதிய அரசியல் கலாசாரம், தமிழர் அபிலாஷைகளையும் வெறும் ஒரு சில கோஷங்களுக்கு அப்பால் சென்று, கோட்பாடுகளாக உள்வாங்க வேண்டும். இதை போராட்டக்காரர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இதற்கு குமார் குணரத்தினத்தின் முன்னிலை சோஷலிச கட்சியும், ஏனைய கட்சிகளுடன் இணைந்து ஒத்துழைக்க வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி தெரிவித்துள்ளார்.

இதுபற்றி மனோ எம்பி மேலும் கூறியதாவது அரசியல் சட்டங்களுக்கு அப்பால் மக்கள் சக்தி உருவாகியுள்ளது. அந்த சக்தியின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற வேண்டியது அதிகாரத்தில் உள்ளவர்களின் கடமையாகின்றது. அது உண்மை. ஆனால், இதே விதமான சட்டத்துக்கு அப்பால் சென்றுதான், கடந்த காலங்களில் தமிழர்கள் ஒடுக்கு முறையை சந்தித்தார்கள். இப்போதும் சந்திக்கிறார்கள். ஆகவே மக்கள் சக்தியை அடிப்படையாகக் கொண்ட மக்கள் சபைகள் உருவாக்கப் படட்டும். புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு தீர்வுகள் வரட்டும். நாமும் அவற்றை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.



ஆனால் சட்டங்கள் வரமுன் அவற்றுக்கு அப்பால் முதலில் கோட்பாடுகள் வர வேண்டும். அவையே பின்னர் அரசியலமைப்பில் இடம் பெறும். இப்போது போராட்டக்காரர்கள் மத்தியில், தமிழர்களின் தேசிய அபிலாசைகள் தொடர்பில், கோட்பாடுகளை நாம் காணவில்லை.

எமக்கு வழங்கப்பட்டுள்ள பல்வேறு போராட்டக்கார அமைப்புகளின் ஆவணங்களில் ஒருசில மென்மையான கோஷங்களைத்தான் நாம் காண்கிறோம். ஆகவே இதற்கு மக்கள் விடுதலை முன்னணி, முன்னிலை சோஷலிச கட்சி ஆகிய அமைப்புகள் ஆவன செய்ய வேண்டும்.

# உலகில் நாட்டை விட்டு வெளியேறிய கடைசி தலைவர் கோத்தா அல்ல!

இலங்கையில் ஊழல் மோசடிகளாலும், பணவீக்க அதிகரிப்பினாலும் தூண்டப்பட்ட அமைதியின்மையின் விளைவாக கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறுவதுடன் ஜனாதிபதிப் பதவியிலிருந்து விலக வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதாகச் சுட்டிக் காட்டியுள்ள சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் நிர்வாக அதிகாரி சமந்தா பவர், ஆட்சிக்கவிழ்ப்பு இடம்பெறும் இறுதி நாடாக இலங்கை இருக்காது என்றும் தெரிவித்துள்ளார்.

உலகளாவிய ரீதியில் உணவுப் பாதுகாப்பு மற்றும் போசணை மட்டம் ஆகியவற்றின் நிலை எவ்வாறானதாக உள்ளது என்பது குறித்துத் தெளிவுபடுத்துகையிலேயே சமந்தா பவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். குறிப்பாக ஆட்சிக்கவிழ்ப்பு இடம் பெறும் இறுதி நாடாக இலங்கை இருக்காது என்றும் அவர் இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக வரலாற்று வழிகாட்டலின் அடிப்படையில் நோக்குகையில் இறுதியாகக் கவிழும் அரசாங்கம் இதுவல்ல என்பதை நாமறிவோம்' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் உலகளாவிய ரீதியிலுள்ள மிகவும் பின்தங்கிய சமூகப் பிரிவினர் பசியினாலும், மந்த போசணையினாலும் வெகுவாகப் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்கு அமெரிக்காவினால் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்



கைகள் தொடர்பில் பகிர்ந்துகொண்ட சமந்தா பவர், பசிக்கும் மந்த போசணைக்கும் எதிராகப் போராடுவதற்கு அரச மற்றும் தனியார் துறையினர் ஒன்றிணைய வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

**Math & Physics Tutoring**

**(For High School Students)**



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றார்!

நாட்டின் 8ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் 21 யூலை 2022 வியாழக்கிழமை பிரதம நிதியரசர் ஜயந்த ஜயசூரிய முன்னிலையில் பதவி பிரமாணம் செய்து கொண்டார்.

சபாநாயகர், படைகல சேவிதர், பாராளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வரவேற்றனர். முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரவேற்கப்பட்டார்.

1981 ஆம் ஆண்டு 02 ஆம் இலக்க ஜனாதிபதி தெரிவு (சிறப்பு ஏற்பாடுகள்) உறுப்புரைகள் மற்றும் அரசியலமைப்பின் 40ஆவது உறுப்புரை ஆகியவற்றின் பிரகாரம் பாராளுமன்றில் இடம் பெற்ற இரகசிய வாக்கெடுப்பின் ஊடாக 8 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக ரணில்



விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டார்.

பாராளுமன்றில் இடம் பெற்ற இரகசிய வாக்கெடுப்பில் 134 வாக்குகளை பெற்று ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட நிலையில், நேற்றைய தினம் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நீதியரசர் முன்னிலையில் ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டமை குறிப்பிடத் தக்கது.

பாராளுமன்றில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதையடுத்து பாராளுமன்றில் உரையாற்றிய ரணில் விக்ரமசிங்க தாம் ஜனாதிபதியாக பதவியேற்கும் நிகழ்வை பாராளுமன்றத்துக்குள் நடத்த வேண்டும் என சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார். அதற்கமைய ரணில் விக்கிரமசிங்க இன்றையதினம் பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் ஜனாதிபதியாக பதவியேற்றார்.

அத்துடன், பாராளுமன்றில் அனைத்து தரப்பினரும் இணைந்து செயற்பட முன்வர வேண்டும் என சபையில் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை சீன முதலீடுகள் மீது முட்டாள்தனமாக பந்தயம் கட்டியது தவறு! CIA தலைவர் பில்பேர்ன்ஸ் தெரிவிப்பு!



இலங்கை சீன முதலீடுகளில் முட்டாள்தனமான பந்தயம் கட்டியுது என சிஐஏ யின் தலைவர் பில்பேர்ன்ஸ் தெரிவித்துள்ளார்

அமெரிக்காவின் சிஐஏயின் தலைவரான பில்பேர்ன்ஸ் தென்னாசிய நாடான இலங்கை சீனாவின் முதலீடுகள் மீது முட்டாள்தனமாக பந்தயம் கட்டியதே இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு காரணம் என தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களாக அத்தியவாசிய பொருட்களை இறக்குமதி செய்வதற்கான அந்நிய செலாவணி இல்லாததால் இலங்கை உணவு எரிபொருள் தட்டுப்பாடுகளையும் நீண்டநேர மின்துண்டிப்பையும் அதிகரித்துவரும் பணவீக்கத்தையும் எதிர் கொண்டுள்ளது.

இந்த நிலையில் இலங்கை தலைவர்கள் மேற்கொண்ட சீனாவின் உயர் கடன் முதலீடுகளே தென்னாசியா நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைவதற்கு காரணம் என சிஐஏ தலைவர் குறிப்பிடுகின்றார். சீனாவிற்கு தன்னை முன்னிறுத்தும் வலிமையும் முதலீட்டை கவரும் திறனும் உள்ளதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

அஸ்பென் பாதுகாப்பு மாநாட்டிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். சீனாவிடம் மிகப்பெருமளவு கடனை பெற்றுள்ள இலங்கை போன்ற நாடு குறித்து உலகநாடுகள் சிந்திக்க வேண்டும் இலங்கை தனது பொருளாதார எதிர்காலம் குறித்து முட்டாள்தனமாக பந்தயம் கட்டியுள்ளது இதன் காரணமாக அரசியல்ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் பேரழிவான விளைவுகளை அந்த நாடு சந்தித்துள்ளது என சிஐஏ தலைவர் தெரிவித்துள்ளார்.

## போராட்டக்காரர்களாலேயே இந்த மாற்றம்! ரணில் நினைவில் வைத்திருக்க வேண்டும்

இலங்கையின் பெரும்பான்மையான பிரஜைகளின் ஆதரவுடன் இளம் செயற்பாட்டாளர்களின் அசாதாரணமான செயற்பாட்டினால் இந்த மாற்றம் சாத்தியமானது என்பதை ஜனாதிபதி விக்கிரமசிங்க நினைவில் கொள்வார் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்

தனது முகநூல் பதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது இலங்கையின் 8வது ஜனாதிபதியாக நாடாளுமன்றத்தினால் தெரிவு செய்யப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்கவிற்கு நான் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். முன்னொரு போதும் இல்லாத சவால்களின் பிடியில் எங்கள் நாடு சிக்கியுள்ள தருணத்தில் அதன் ஆட்சி பொறுப்பை ஏற்கின்றார்.

இலங்கையின் பெரும்பான்மையான பிரஜைகளின் ஆதரவுடன் இளம் செயற்பாட்டாளர்களின் அசாதாரணமான செயற்பாட்டினால் இந்த மாற்றம் சாத்தியமானது என்பதை ஜனாதிபதி விக்கிரமசிங்க நினைவில் கொள்வார் என்பதில் எனக்கு சந்தேகமும் இல்லை. அவர்களின் கடுமையான அழைப்பு மக்களின் நலனிற்கான ஆட்சிக்கானதே தவிர



தனது நலனிற்கான ஆட்சிக்கானதல்ல சட்டத்தின் ஆட்சி நேர்மை நல்லாட்சி நிலவும் ஆட்சிக்கானதே அவர்களின் குரல்கள் ஊழல்களில் ஈடுபட்டுள்ள அரசியல்வாதிகளிற்கு எந்த இடமும் அளிக்காத அரசாங்கத்திற்கானது. இது மிகவும் கடினமான சவால். இதற்கு புதிய அரசமைப்பை உருவாக்குவதன் மூலம் அரசியல் சிவில் சமூக தலைவர்கள் தீவிர பங்களிப்பை செய்யவேண்டும். இது எங்கள் வரலாற்றில் தீர்க்கமான தருணம். இலங்கைக்கு தங்கள் இதயத்தில் தொலை நோக்கும் தாராள மனப்பான்மையும் கொண்ட தலைவர்கள் தேவை என அவர் தெரிவித்துள்ளார்.

## போராட்டக்காரர்களை அம்பலப்படுத்திய விமல் வீரவன்ச

ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை சுற்றி வளைக்கப்பட்டதன் பின்னரும் அதற்கு முன்னர் ஜனாதிபதி இராஜினாமா செய்ய வேண்டுமென நாங்கள் கூறவில்லை ஏன்? எனக் கேள்வியெழுப்பிய தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் எம்.பியுமான விமல் வீரவன்ச, அந்தப் பதவியில் இருப்பவர் அப்படியே விலகிவிட்டால், அதனை விடவும் மோசமானவரைக் கொண்டு அப்பதவியை நிரப்ப முடியும் என்பதனால் ஆகும் என்றார்.

இது அராஜகத்தை ஏற்படுத்தும் செயலாகும். இளம் போராட்டக்காரர்கள் அதனை விளங்கிக் கொள்ளவில்லை. யோசிக்கும் அளவுக்கு அவர்கள் சொந்தபுத்தியில் இருந்தார்கள் என்று நான் நினைக்கவில்லை என்றார். கொழும்பில் நேற்று (22) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த அவர், இறுதியில் என்ன நடந்தது. ஜனாதிபதி மாளிகையை சுற்றி வளைக்கும் போதும் போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் நடத்துமாறு உத்தரவிடாத ஜனாதிபதி வீட்டுக்குச் சென்றுள்ளார். போராட்டக்காரர்களுக்கு பருப்பு ஊட்டுவதற்கு முயன்றவர் ஜனாதிபதி ஆகி விட்டார். வியூகமோ தொலைநோக்கு பார்வையோ இல்லாத 'போராட்டத்தின்' விளைவாகவும் போராட்டக்காரர்களையே முடக்கும் ஒருவரான ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானார். ரணிலுக்கு வாக்களித்தது ஏன்? பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு இன்மை. எல்லாவற்றுக்கும் முன்னதாக இந்த நிலைமையை இல்லாமற் செய்ய வேண்டும். அதனை செய்யக் கூடியவர்கள் யார்? ரணில் விக்கிரமசிங்க, அந்த மனநிலையை ஏற்படுத்தியவர்கள் யார்? போராட்டக்காரர்கள் என்றார்.

லால்காந்த, சுனில் ஹந்துநெத்தி உள்ளிட்ட குழுவினர், பாராளுமன்றத்தை மற்றுமொரு ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகையாக முயன்றபோது, அவசரகாலச் சட்டம் மற்றும் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தி, பாதுகாப்பு தரப்பினருக்கு கட்டளையிட்டு, தாக்குதல் நடத்தியவர் ரணில் விக்கிரமசிங்க, அவ்வாறானவரே இன்று ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். அரசியல் நோக்கம், எதிர்கால நோக்கம் உள்ளிட்டவை எதுவுமே இல்லாத காதுகளில் தோடுபோட்டிருந்தவர்கள், தாடி வைத்திருந்தவர்கள் தலைமுடியை அலங்கோலமாக வைத்திருந்த குழுவினர். வீரர்களாகி, கதைகளை கூறி சமூக வலைத்தளங்களின் ஊடாக பிரசாரங்களை மேற்கொண்டு, நடிகர்களும் இணைந்து இந்த நிலைமையை தோற்றுவித்து விட்டனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.




மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் துணை

ஜாதகம் பார்க்கப்படும்

கடந்த 40 வருடமாக தென்னிந்தியா, ஆசியா, அவுஸ்திரேலியா, ஐரோப்பா, வட அமெரிக்கா மற்றும் கனடாவில் பல தமிழ் மக்களின் வாழ்க்கையை மாற்றியமைத்த திரு. கோ. காசிலிங்கம் அவர்கள் இப்போது கனடாவில். பிறந்த வருடம், மாதம், திகதி, நேரத்தை சொன்னால் போதும் நந்தி வாக்கியம் மூலம் நாள் நட்சத்திரம் கண்டு நடந்தது நடக்கப் போவதை தனது திறமையால் மிகத் துல்லியமாகக் குறித்து எழுதி பலன் சொல்லப்படும்.

குழந்தைகளுக்கு ஜாதகம் எழுதிக் கொடுக்கப்படும்

திருமணப் பொருத்தம் பார்த்து சொல்லப்படும்

கோ. காசிலிங்கம்

1320 Pharmacy Ave, Scarborough ON, M1R 2T3 (Main Intersection Pharmacy and Ellesmere Rd)

Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164



# ஜனாதிபதி பதவிக்கு ரணில் விக்கிரமசிங்காவை ஆதரிக்கும் கட்டத்திற்கு இந்தியா தள்ளப்பட்டது ஏன்?

கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி விலகலை அடுத்து, புதிய ஜனாதிபதியை தேர்வு செய்வதற்கான நாடாளுமன்ற வாக்கெடுப்பு மூலம் ரணில் விக்கிரமசிங்க இலங்கையிள் 8வது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

புதிய ஜனாதிபதி தேர்வுக்காக, இலங்கையின் தற்போதைய பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகபெரும மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க ஆகியோர் போட்டியிட்டனர்.

இந்த நிலையில் இலங்கையில் புதிய ஜனாதிபதியை தேர்வு செய்வதற்கான நடவடிக்கைகளில் இந்தியா, அமெரிக்கா, சீனா உள்ளிட்ட நாடுகள் தலையீடுகளை செய்து வந்ததாக சில தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகபெரும, சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு சார்பாக செயற்படுகின்றமை, இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கை ஜனாதிபதி வாக்கெடுப்புக்கு தலையீடு செய்கின்றமைக்கு காரணம் என மூத்த பத்திரிகையாளர் ஆர்.சிவராஜா தெரிவிக்கிறார்.

இலங்கையில் உரப் பிரச்சினை ஏற்பட்ட சந்தர்ப்பத்தில், கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் இந்தியாவிடம் உதவிகளை நாடிய போது, டளஸ் அழகபெரும, விமல் வீரவங்க, உதய கம்மன்பில உள்ளிட்ட தரப்பினர் ரஷ்யா மற்றும் சீனாவிடம் செல்ல வேண்டும் என வலியுறுத்தியிருந்ததாகவும் அவர் கூறுகின்றார்.



இதனால் ரணில் விக்ரமசிங்க, இலங்கையின் புதிய ஜனாதிபதியாக தேர்வு செய்யப்படுவதற்கு இந்தியா விரும்பி வருவதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

இந்தியா ரணிலையே விரும்புகின்றனது. ஏனென்றால், டளஸ் அழகபெரும பக்கத்தில் உள்ள விமல் மற்றும் கம்மன்பில ஆகியோர் சீனா, ரஷ்யா சார்பானவர்கள் என்பதை பகிரங்கமாகவே அறிவித்தவர்கள். வாசுதேவ நாணயக்கார உள்ளிட்டவர்களும் சீனா, ரஷ்யா சார்ந்தவர்கள். இதனால், அவர்களின் ஆதிக்கம் இலங்கையில் அதிகரித்து விடும் என இந்தியா பயப்படுகின்றது. இந்தியா அரசியல் ரீதியிலான அழுத்தங்களை கொடுக்கா விட்டாலும், அழுத்தங்களை கொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கின்றதுஎன மூத்த பத்திரிகையாளர் ஆர்.சிவராஜா தெரிவிக்கின்றார்.

இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருந்த தருணத்தில், இந்தியா இலங்கைக்கு உடனடி கடனுதவிகளை வழங்கியிருந்தது. இதனால், பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட இலங்கை, சற்றேனும் தலை நிமிர இந்தியா பாரிய ஒத்துழைப்புக்களை வழங்கி வந்தது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில், இந்தியாவிடம் தொடர்ந்தும் கடனை பெற்றுக் கொள்ளாது, எரிபொருளுக்கான ரஷ்யாவிடம் செல்வோம் என டளஸ் அழகபெரும, சார்ந்தவர்கள் தெரிவித்திருந்ததாக மூத்த பத்திரிகையாளர் ஆர்.சிவராஜா கூறுகின்றார்.

இந்தியாவிடம் தொடர்ந்தும் கடனை வாங்காமல், நாங்கள் எரி பொருளுக்காக ரஷ்யாவிடம் போவோம். ரஷ்யா இருக்கும் போது, ஏன் நீங்கள் இந்தியாவிடம் செல்ல வேண்டும் என அவர்கள் கூறினார்கள். உர பிரச்சினை வரும் போது சீனாவிடம் போவோம். ரஷ்யாவிடமிருந்து எடுப்போம். சீனா, ரஷ்யா எங்களுடன் நல்ல நாடுகள் என சொன்னார்கள். ஆனாலும், கோட்டாபய ராஜபக்ஸ அந்த சந்தர்ப்பத்தில் யாரையும் ரஷ்யாவிற்கு அனுப்பவில்லை.

அப்படி அனுப்பினால், இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் கோபித்துக் கொள்ளும் என கோட்டாபய ராஜபக்ஷவிற்கு தெரியும். சீனாவுடன் நெருக்கமாக பழகுபவர் தான் டளஸ் அழகபெரும. அதனால், விரும்பியோ விரும்பாமலோ, இலங்கைக்கு ராஜதந்திர ரீதியிலான அழுத்தங்களை கொடுக்க வேண்டிய இடத்தில் இந்தியா உள்ளது. விரும்பியோ விரும்பாமலோ ரணிலை ஆதரிக்க வேண்டிய கட்டாயம் இந்தியாவிற்கு ஏற்பட்டமைக்கு காரணம் இதுவே என அவர் குறிப்பிடுகின்றார்.

டளஸ் அழகபெருமவின் அரசியல் வாழ்க்கைக்கு பின்னால், ரஷ்யா மற்றும் சீனாவின் ஆதிக்கம் இருப்பதாவே பலரும் கூறி வருவதாக மூத்த பத்திரிகையாளர் ஆர்.சிவராஜா பிபிசி தமிழுக்கு தெரிவித்தார்.

இதேவேளை இலங்கையின் புதிய ஜனாதிபதியை தேர்வு செய்வதற்கு நாடாளுமன்றத்தில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பு குறித்து, ராஜதந்திர ரீதியில் பல நாடுகள் பல்வேறு கலந்துரையாடல்களை நடத்தி பல தரப்பிற்கு அழுத்தங்களை பிரயோகித்துள்ளதாக தற்போது தகவல்கள் வெளியாகி வருகின்றன.

# ஆட்சியாளர்களுக்கு எதிரான காலிமுகத்திடல் போராட்டம் தொடரும் என்கிறார்கள் போராட்டக்காரர்கள்!

காலிமுகத்திடலில் இடம் பெற்று வரும் அரச எதிர்ப்பு போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படுமென போராட்டத்தின் ஏற்பாட்டாளர்களில் ஒருவரான அருட் தந்தை ஜீவந்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்க பதவி விலக வேண்டும் என்பதே தமது இரண்டாவது முக்கிய கோரிக்கை எனவும் காலி முகத்திடல் போராட்டத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.



பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றில் ஜனாதிபதியாக தெரிவாகிய பின்னரும் ஜனாதிபதி செயலகத்தை எமது கட்டுப்பாட்டில் வைத்தவாறே போராட்டத்தை தொடர்ந்து நடத்தவுள்ளோம்.

எவரும் மக்களின் பக்கம் இல்லையென்பதை இன்றைய பாராளுமன்ற நடவடிக்கைகள் நீரூபித்துள்ளன. மக்களுக்கு எதிரானவரை ஆட்சியாளராக நியதித்துள்ள நிலையில், போராட்டம் தொடர்கின்றது. இந்த போராட்டத்தின் மூலம் தேவை யான பொருளாதார, அரசியல் மற்றும் சமூக ஸ்திரத்தன்மையை அடைய நாங்கள் எண்ணியுள்ளோம் என அருட் தந்தை ஜீவந்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பொது மக்களின் விருப்பத்திற்கு மாறாக ஜனாதிபதி நியமனம் செய்யப்பட்டுள்ளதால் அவர் பதவி விலக வலியுறுத்தி அமைதியான முறையில் போராட்டம் தொடரும் எனவும் அவர்கள் குறிப்பிட்ட னர்.

பாராளுமன்றம் மக்களின் விருப்பத்திற்கு மாறாக ஒரு முடிவை எடுத்துள்ளது. ராஜபக்ஷவினரே ரணில் விக்கிரமசிங்கவை ஆட்சிக்கு கொண்டு வந்துள்ளனர். எனவே, ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஊழல் முறைமைக்கு எதிராகவும் எமது அமைதியான போராட்டங்கள் தொடரும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை பாராளுமன்றம், பாராளுமன்ற ஜனநாயகம் என்பதை மதிக்காமல் ஒரு சிலரால் முன்னெடுக்கப்படும் மக்கள் போராட்டம் என்ற போர்வையில் அரச எதிர்ப்புப் போராட்டத்தை இன்னும் சில நாட்களில் இராணுவ பலப் பிரயோகம் மூலம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவும் ஜனாதிபதி ரணில் தயங்க மாட்டார் என்று கொழும்பு ஊடகவியலாளர் ஒருவர் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க காலிமுகத்திடல் பகுதியில் உள்ள பண்டாரநாயக்கவின் உருவச்சிலையை சுற்றியுள்ள 50 மீற்றர் சுற்றுவட்டத்திற்குள் நுழையக்கூடாது என கோட்டை நீதிவான் நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

கொழும்பு – காலிமுகத்திடல் கோட்டா கோ கம போராட்டக்காரர்கள் அங்குள்ள பண்டாரநாயக்க உருவச்சிலையை சுற்றியுள்ள 50 மீற்றர் சுற்றுவட்டத்திற்குள் நுழையக்கூடாது என கோட்டை நீதிவான் நீதிமன்றம் இவ்வாறு தடையுத்தரவு பிறப்பித்துள்ளது. குறித்த தடையுத்தரவு 20 யூலை 2022 விதிக்கப்பட்டுள்ளது.

சிலைக்கு சேதம் விளைவிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக தகவல் கிடைத்துள்ளதாக கோட்டை பொலிஸார் விடுத்த கோரிக்கைக்கு அமைய கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

(5ம் பக்கத் தொடர்ச்சி) உணர்த்தியது. இந்த நிலையில் தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் கொந்தளிப்புக்களில் வெளித் தரப்புக்களின் தலையீடுகளுக்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகவே ,ருந்தன. எனினும் இந்தியா, ரணிலை தோற்கடிக்கச் சொல்வதான ஒரு கதையும் சம்பந்தன் – சுமந்திரனால் கூறப்பட்டிருக்கின்றது. இதனை இதுவரையில் சம்பந்தனோ, சுமந்திரனோ மறுக்கவில்லை.

ஆனால் இந்திய தூதரகம் ,தனை மறுத்திருக்கின்றது. இதன் மூலம் இந்தியாவின் பெயராலும் சம்பந்தனும் சுமந்திரனும் விடயங்களை திசைதிருப்ப முயற்சித்திருக்கின்றனர் என்பது தெளிவாகின்றது. அந்தளவுக்கு இதிலுள்ள சுயநலம் என்ன? இது பாரதூரமான தவறாகும். தமிழர் தரப்புக்களை இராஜதந்திர சமூகத்திலிருந்தும் அந்நியப் படுத்தும் ஒரு செயலாகும்.

சம்பந்தன் சுமந்திரனின் முடிவால், மீண்டுமொரு முறை, தமிழ் மக்களின் அரசியல் வெறும் சுயநலன்களுக்காகப் பந்தாடப்பட்டிருக்கின்றது. எங்களுடைய அரசியல் நிலைப்பாடுகளில் உறுதியாக இருக்கும் அதேவேளை, எங்களுடைய விடயங்களை செவிமடுக்கக் கூடிய ஆட்சியார்களோடு, ஊடாடுவதற்கான இடைவெளியையும் பேணிப் பாதுகாக்க வேண்டும். அது தான் அரசியல் சாணக்கியம். ஒப்பீட்டடிப் படையில் ரணில் உரையாடக்கூடிய ஒருவர். ஏற்கனவே கூட்டமைப்போடு பணியாற்றிய ஒருவர். ஆனால், அவ்வாறான ஒருவரை எதிர்த்து, மீண்டும் சம்பந்தனும் சுமந்திரனும் தமிழ் மக்களுக்கான வாய்ப்புக்களை நாசப்படுத்தியிருக்கின்றனர். அவர்கள் தொடர்ந்தும் இவ்வாறு தான் செயல்படப் போகின்றார்கள் என்றால், தமிழ் சமூகம் எதுவரையில் இதனை அனுமதித்துக் கொண்டிருக்கப் போகின்றது? முக்கியமாக தமிழ் புதிய தலைமுறை இவ்வாறான தவறுகளின் ஆடுகளத்தை .இன்னும் எத்தனை காலத்துக்கு சகித்துக் கொண்டிருக்கப் போகின்றது?

உ
சிவமயம்

# அருள்மிகு ரொறன்ரோ திருச்செந்தூர் முருகப்பெருமான் ஆலய
## சுபகிருது வருட மகோற்சவ விஞ்ஞாபனம் - 2022



சகலவளங்களும் ஒருங்கே அமையபெற்ற ஒன்ராறியோ மாகாண நோர்த் யோர்க் நகரத்தில் கோவில் கொண்டு வேண்டுவோருக்கு வேண்டும் வரத்தை அள்ளிக் கொடுக்கும் திருச்செந்தூர் முருகனுக்கு நிகழும் சுபகிருது வருடம் ஆடிமாதம் 20ஆம் நாள் 04/08/2022 வியாழக்கிழமை சுக்லபட்ச ஷப்தமி திதியும் சுவாதி நட்சத்திரமும் கூடிய சுபயோக சுபதினத்தில் கொடியேற்றத்துடன் பதினொரு தினங்கள் பிரமோற்சவம் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. பக்தர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு எம்பெருமான் திருவருளை பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

### துவஜாரோகணம் (கொடியேற்றம்)

காலை 7:00 மணிக்கு கும்பபூஜை
9:00 மணிக்கு விஷேடபூஜை
9:30 மணிக்கு வசந்த மண்டப பூஜை
11:00 மணிக்கு துவஜாரோகணம் (கொடியேற்றம்)
04-08-2022 வியாழக்கிழமை

### தேர்த்திருவிழா

13-08-2022 சனிக்கிழமை காலை
5:00 மணிக்கு ஆலய பூஜை 05:30 மணிக்கு கும்பபூஜை
07:00 மணிக்கு விஷேட பூஜை
8:00 மணிக்கு வசந்தமண்டப பூஜை
நண்பகல் 10:00 மணிக்கு இரத ஆரோகணம்
13-08-2022 சனிக்கிழமை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொடியேற்றம் | 04-08-2022 | வியாழக்கிழமை | சப்பறம் | 12-08-2022 | வெள்ளிக்கிழமை |
| தேர்த் திருவிழா | 13-08-2022 | சனிக்கிழமை | தீர்த்தம் | 14-08-2022 | ஞாயிற்றுக்கிழமை |
| பூங்காவனம் | 15-08-2022 | திங்கட்க்கிழமை | வயிரவர் மடை | 16-08-2022 | செவ்வாய்க்கிழமை |

### உற்சவகால பூஜை நேரங்கள்

காலை
08:00 மணிக்கு ஆலய பூஜை
08:30 மணிக்கு சங்கல்ப்பம், கும்பபூஜை, அபிஷேகம்
10:00 மணிக்கு ஆலய பூஜை
11:30 மணிக்கு வசந்தமண்டப பூஜை

மாலை
05:30 மணிக்கு அபிஷேகம்
07:00 மணிக்கு ஆலய பூஜை
08:00 மணிக்கு வசந்தமண்டப பூஜை

இங்ஙனம் ஆலய அறங்காவலர் சபை

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# ரொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலயம்
# Toronto Thiruchendur Murugan Temple

19 Penn Dr, North York, ON M9L 2A7. Tel: 416-744-9568

சுபம்

# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! யூலை மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

**அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.**

**தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா**

**செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)**

**பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)**

**உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)**

**உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)**

**பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்**

**இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்**

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

9 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

16 யூலை 2022 முதல் 22 யூலை 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ் வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த 2021 செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி நளினி அழகராஜா

கொழும்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி நளினி அழகராஜா அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 21 யூலை 2022 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரின் குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி நளினி அஜகராஜா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு தம்பிராசா காசிலிங்கம்

யாழ்.ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராசா காசிலிங்கம் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 18 யூலை 2022 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு தம்பிராசா காசிலிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 21வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி விநாசித்தம்பி தங்கம்மா

புங்குடுதீவு 10ம்வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி விநாசித்தம்பி தங்கம்மா அவர்களது 21வது ஆண்டு நினைவு நாள் 28 யூலை 2022 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரின் குடும்பத்தினர் அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி விநாசித்தம்பி தங்கம்மா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.



# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



15 யூலை 2022 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ராஜ்குமார் சுமதி இணையர்களின் 33வது திருமண நன்நாளாகும். அன்றைய தினம் இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




16 யூலை 2022 சனிக்கிழமை கனடா வாழ் துன்னாலை கரவை மக்கள் மன்றத்தினர் வருடாந்த கோடைகால ஒன்றுகூடலை முன்னிட்டு அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



17 யூலை 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி விதுரா ஜெனுஷா தம்பதிகளின் செல்வப்புதல்வன் மக்காயா நகுல் சிவசோதியின் இரண்டாவது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வன் மக்காயா தனது பெற்றோர்கள் மற்றும் பேரன் பேத்திமாரோடு இநைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



18 யூலை 2022 திங்கட்கிழமை யாழ். ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராஜா காசிலிங்கம் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் விசேட சிறப்பு உணவு வழங்கினார்கள்.



18 யூலை 2022 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பாஸ்கரன் தர்மினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் நிஜெசன் பாஸ்கரனின் 17வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் நிஜெசன் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



20 யூலை 2022 புதன்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



21 யூலை 2022 வியாழக்கிழமை கொழும்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி நளினி அழகராஜா அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



5 யூலை 2022 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி விஜயரூபன் காயத்திரி தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஆறியன் விஜயரூபனின் முதலாவது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் ஆறியன் தனது பெற்றோர்கள், உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



## அன்பு இல்லக் குழந்தைகளின் வாழ்வுக்காகவும் வாழ்வாதாரத்திற்காகவும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை நடாத்தும் 10வது ஆண்டு நிறைவின் இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும் 12 நவம்பர் 2022 சனிக்கிழமை

## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து



## செல்வன் மக்காயா நகுல் சிவசோதி

கனடாவில் வசிக்கும் திரு திருமதி விதுரா ஜெனுஷா தம்பதிகளின் செல்வப்புதல்வன் மக்காயா நகுல் சிவசோதியின் இரண்டாவது பிறந்த நன்நாள் 17 யூலை 2022 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடிய செல்வன் மக்காயா தனது பெற்றோர்கள், பேரன் பேத்திமாரோடு இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்கும் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார். அகவை இரண்டு காணும் செல்வன் மக்காயா பல்கலையும் கற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தும் அவரது பெற்றோர்கள், உற்றார், உறவினர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!

வீடு மற்றும் வாகன காப்புறுதி

# HOME & AUTO INSURANCE

வீடு HOME

வாகனம் AUTO

மோட்டர் சைக்கிள் MOTOR CYCLE

படகு BOAT

கனரக வாகனம் TRAILER

காப்புறுதித் தேவைகளுக்கும், விபரங்களுக்கும் அழையுங்கள்





TR FORTUNE FAVOURS THE BOLD

CALL NOW FOR A QUOTE!

THUSHANTHAN RAVINDRAN

647-401-2653

# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com




கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம் பெருமையுடன் வழங்கும்
இவ்வாண்டின்
மாபெரும் இன்னிசை நிகழ்ச்சி
அனுமதி இலவசம்
FREE ADMISSION
JOYTHI
Blazing Minds
2022
Super Singer
Balaji
Super Singer
Vanathi
Super Singer
Abarna
Mega Tuners
POWERED BY
ANANTH THARMALINGAM
RAJESH LINGANATHAN
416-939-9525
THE REMAX Guys
RE/MAX COMMUNITY
RAISING YOUR VALUE
PLATINUM SPONSOR
RhynoCare
TAKE CHARGE OF YOUR HEALTH
416 830 8181
SILVER SPONSOR
Niuniu's ROOFING INC.
www.niuniuroofing.ca
647-567-8564
GRAND MUSICAL EVENT
WITH CANADIAN SINGERS & SUPER SINGERS
JULY 30 - 31 ALL DAY EVENT
Canada Sri Ayyappan Temple
635 Middlefield Road, Scarborough, ONTARIO. M1V 5B8
FOR ADD AND VENDORS PLEASE CONTACT : 416-321-6104, 416-321-7558

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases






Mahindan Mailvaganam, B.Sc., M.Sc.
Senior Insurance Specialist
Elite Field Sales Advisor
RBC Insurance
WOODSIDE SQUARE MALL (McCowan & Finch)
1571 Sandhurst Circle
Scarborough, ON M1V 1V2
mahindan.mailvaganam@rbc.com
Cell: 416-262-4973

- Universal Life Insurance
- Term (10 to 40 years) Insurance
- Term 100
- Non Medical Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Travel Insurance
- RRSP
- TFSA

உங்கள் வாகனத்தின் மாதாந்த காப்புறுதி கட்டணம் அதிகரிக்கப்பட்டிருந்தால் எமது காப்புறுதி ஆலோசகர்களால் உங்களுக்கு உதவ முடியும்!

RBC Insurance
Life | Health | Auto | Home | Travel | Wealth





TAX CENTRIC

2338 Hurontario St., Unit 100A, Mississauga, ON L5B 1N1

உங்கள் கணக்கியல் வருமானவரி சம்பந்தமான தேவைகளுக்கு அனுபவமுள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

Servicing clients from Mississauga, Brampton, Hamilton, St. Catharines, Niagara, Kitchener, Cambridge and Guelph

- Personal Tax
- Corporate Tax
- Book Keeping & Accounting
- Payroll Services
- GST/HST Filing
- Corporate Services
- Business Startup
- Financial Planning



**Gayatiri Thavan**
Tel: 289.569.0169 • Fax: 289.569.0167
Email: taxcentric@outlook.com
www.taxcentric.ca

# நரியைப் பரியாக்குவது?

கோத்தா ஒரு தொழில் சார் அரசியல்வாதியல்ல. வெல்ல முடியாத ஒரு யுத்தத்தை வென்ற காரணத்தாலும் மகிந்த குடும்பத்தைச் சேர்ந்தவர் என்ற காரணத்தாலும் அவர் ஜனாதிபதியாக வர முடிந்தது. யுத்தத்தில் வென்றமை தான் தன்னுடைய பிரதான தகைமை என்று அவர் முழுமையாக நம்பினார். ஒரு படைத்துறை ஆளுமையாகவே தன்னைக் காட்டிக் கொண்டார்.

வெள்ளை மேற்சட்டையில் படைத்துறை மெடல்களை அணிந்தபடி காட்சியளித்த ஒரு ஜனாதிபதி அவர். தன்னை எப்பொழுதும் வித்தியாசமானவராகவே கருதினார். எனைய சிங்கள அரசியல்வாதிகளிடமிருந்து நடை உடை பாவனை எல்லாவற்றிலும் தன்னை வேறுபடுத்த விரும்பினார். அவர் வேட்டியும் நசனலும் அணிவதில்லை. தலைக்கு டை பூசுவதில்லை. அது மட்டுமல்ல தனது சகோதரர்களிடமிருந்தும் தன்னை வேறுபடுத்திக் காட்டினார்.

தமது குடும்பத்தின் குலச் சின்னமாகக் கருதப்பட்ட குரக்கன் நிறச்சால்வையை அவர் அணிவதில்லை. அவருடைய பதவியேற்பு வைபவத்தில் அவருடைய மூத்த சகோதரர் சமல் அந்தச் சால்வையை ஒரு பேழைக்குள் வைத்து அவருக்குப் பரிசளித்தார். ஆனால் கோத்தா அந்தச் சால்வையை அணியவில்லை.

இவ்வாறாகத் தன்னை ஒரு வித்தியாசமான ஜனாதிபதியாக காட்டிக் கொண்ட ஒருவர் வித்தியாசமான முறையிலேயே தன் பதவியை விட்டு ஓட வேண்டி வந்தது

.உலகிலேயே மின்னஞ்சலில் தனது ராஜினாமாக் கடிதத்தை அனுப்பிய நிறைவேற்று அதிகாரமுடைய ஒரு ஜனாதிபதி கோத்தா தான். எந்த நாட்டைச் சிங்கள மக்களுக்கு வென்று கொடுத்ததாக பிரகடனப் படுத்தினாரோ அதே நாட்டில் அவருக்குப் பாதுகாப்பு இல்லை. தன் சொந்த மக்களுக்கு பயந்து ஓடி ஒளிய வேண்டிய நிலை. முஸ்லிம் மக்களின் உணர்வுகளை புறக்கணித்து ஜனாஸாக்களை எரிக்குமாறு உத்தரவிட்டவர் ஒரு முஸ்லிம் நாட்டில் முதலில் தஞ்சம் அடைந்தார். புத்த பகவான் கூறுவது போல மாற்றம் ஒன்று தான் மாறாதது.

கடந்த மூன்று மாதங்களில் நிகழ்ந்த மாற்றங்களைத் தொகுத்துப் பார்த்தால், யாப்புச் செயலிழந்து விட்டது, நாடாளுமன்றம் செயலிழந்து விட்டது, சட்டம் ஒழுங்கு செயலிழந்து விட்டது. யாப்பின்படி மகிந்தாவையும் கோத்தாவையும் நீக்க முடியாது. ஆனால் மக்கள் எழுச்சிகளின் மூலம் அவர்கள் நீக்கப்பட்டு விட்டார்கள். நாடாளுமன்றம் அதன் மக்கள் ஆணையை இழந்து விட்டது. எந்தக் கட்சிக்கு 69 லட்சம் பேர் ஆணையை வழங்கினார்களோ, அந்தக் கட்சியின் பிரதானிகளை மக்கள் ஓடஓடத் துரத்துகிறார்கள்.

சட்டம் ஒழுங்கும் செயலிழந்து விட்டது. ஊரடங்குச் சட்டம் அவசர காலச்சட்டம் என்பவை இருக்கத் தக்கதாகவே ஆர்ப்பாட்டக்காரர்கள் அரச கட்டிடங்களை கைப்பற்றுகிறார்கள். நாட்டின் ஜனாதிபதி தான் முப்படைகளின் தளபதி.தன் படைகளை முழுமையாக அவர் நம்பியிருந்திருந்தால் நாட்டில் எங்காவது ஒரு படைத்தளத்தில் மறைவாக இருந்திருக்கலாம். அவர் நாட்டை விட்டு ஓடத் தீர்மானித்தமை என்பதில் அவர் படையினரையும் நம்பத் தயாரில்லை என்ற செய்தி உண்டு. இது தான் இலங்கை தீவின் இப்போதுள்ள நிலைமை.

ரணில் விக்கிரமசிங்கவிற்கு மக்கள் ஆணை இல்லை. தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படாத நிறைவேற்று அதிகாரம் உடைய ஒரு பதில் ஜனாதிபதி அவர். எதிர்க்கட்சிகளும் ஆர்ப்பாட்டக்காரர்களும் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் ராஜபக்சகளைப் பாதுகாப்பவர் என்பதனால் அவருக்கு தாமரை மொட்டுக் கட்சியின் ஆதரவு கிடைக்கும். தவிர மேற்கு நாடுகளும் ஐ.எம்.எஃபும் அவரை ஆர்வத்தோடு பார்க்கின்றன. ஆர்ப்பாட்டக்காரர்களின் பின்னணியில் நிற்பதாக கருதப்படும் இடதுசாரி மரபில் வந்த அமைப்புகளை மேற்கு நாடுகள் எச்சரிக்கை உணர்வோடு தான் பார்க்கின்றன. கோட்டாவை அகற்றுவதற்கான கருவிகளாக மேற்படி இடதுசாரி மரபில் வந்த அமைப்புக்களை ஏற்றுக் கொள்ளும் மேற்கு நாடுகள், அந்த வெற்றியின் அடுத்த கட்டமாக மேற்படி கட்சிகளும் அமைப்புகளும் அரசியலில் முதன்மை ஸ்தானத்துக்கு வருவதை ரசிக்கவில்லை. இந்தியாவும் அதை ரசிக்காது. எனவே மேற்குநாடுகளும் ரணிலைப் பாதுகாக்க விரும்பும். ராஜபக்சக்களும் ரணிலைப் பாதுகாக்க விரும்புகிறார்கள். இனிவரும் நாட்களில் ரணிலைப் பலப்படுத்துவதற்கான பேரங்களும் சூழ்ச்சிகளும் அதிகமிருக்கும். வெளியிலிருந்தும் அவருக்கு உதவிகள் பாய்ச்சப்படும். ஆனால் ஆர்ப்பாட்டக்காரர்களும் எதிர்க்கட்சிகளும் ரணிலை அகற்ற விரும்புகின்றனர். ஆயின் அடுத்த கட்டம் என்ன?



காலாவதியான நாடாளுமன்றத்தை வைத்துக் கொண்டு ஒன்றையும் செய்ய முடியாது. ஒரு புதிய மக்களானையை பெறுவதற்கான ஒரு தேர்தலுக்குப் போக வேண்டும். ஆனால் அது உடனடிக்கு முடியுமா? ஒரு தேர்தல் நடக்கும் வரையிலும் இடைக்கால ஏற்பாடு ஒன்று தேவை.எதிர்க்கட்சிகள் அப்படிப்பட்ட ஓர் இடைக்கால ஏற்பாட்டுக்குத் தயாரா? நாடாளுமன்றத்தில் இப்பொழுதும் தாமரை மொட்டுக் கட்சி பலமாகக் காணப்படுகிறது. எனவே ஒரு புதிய இடைக்கால ஏற்பாட்டுக்குப் போவது என்றால் தாமரைமொட்டுக் கட்சியின் ஆதரவு தேவைப்படும். அதனால் தாமரை மொட்டுக் கட்சியின்மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டிய தேவை உண்டு.

ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகம் மற்றும் நாடாளுமன்றம் போன்றவற்றை ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்றுகையிட்டார்கள். எனினும் பௌத்த மகாசங்கம், சட்டத்தரணிகளின் அமைப்பு போன்றன அதற்கு ஆதரவாகக் காணப்படவில்லை. நாடாளுமன்றத்தை செயலிழக்க செய்வது என்பது பிரதிநிதித்துவ ஜனநாயகத்தை செயலிழக்க செய்வது தான். பிரதிநிதித்துவ ஜனநாயகத்தை நம்பவில்லை என்றால் ஆர்ப்பாட்டக்காரர்கள் அதற்கு மாற்றீடாக வைத்திருக்கும் கட்டமைப்பு என்ன?

குமார் குணரட்ணம் கூறுகிறார், மக்கள் அதிகார மையங்களை ஏற்படுத்துவோம் என்று. அந்த மக்கள் அதிகார மையங்கள், பிரதிநிதித்துவ ஜனநாயகத்தை பிரதியீடு செய்யுமா? நாட்டில் இப்போதுள்ள பிரதிநிதித்துவ ஜனநாயக கட்டமைப்பு பொருத்தமானது அல்லவென்றால் பொருத்தமான ஒரு முன்மாதிரியான கட்டமைப்பை ஆர்ப்பாட்டக்காரர்கள் கட்டியெழுப்ப வேண்டும். ஆனால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் அமைப்புகள் மத்தியில் அது தொடர்பான விழிப்பு ஏதும் இருக்கிறதா?

குமார் குணரட்ணம் கூறுகிறார் அது நான்காவது அதிகாரம் என்று இந்தப்பலம் உயிரோட்டமானது. நிறைவேற்று அதிகாரம், நாடாளுமன்றம் மற்றும் நீதிமன்றம் என்ற மூன்று அதிகாரத் தூண்களுக்குப் மேலதிக புதிய மக்கள் போராட்டம் என்ற அதிகார தூண் உருவாகியுள்ளது. இது மக்களின் இறையாண்மைப் பலம். இந்தப் பலத்திற்கு பதிலளிக்காது, வளைந்து கொடுக்காது, பிரதிநிதித்துவ ஜனநாயகம் என்ற போர்வையில் இதுவரை விளையாடி வந்தனர். எனினும் தற்போது மக்களின் இறையாண்மை பலம் நேரடியாக செயற்பாட்டுக்கு வந்துள்ளது. இந்தப் பலத்தை நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் புரிந்துக் கொள்ள வேண்டும் என்று குமார் கூறுகிறார்.

அவர் கூறுவதில் உண்மை உண்டு. நாடாளுமன்றத்துக்கு வழங்கப்பட்ட மக்கள் ஆணையை மக்கள் மீளப் பெற்று விட்டார்கள். புதிய மக்கள் அதிகாரத்தின் விளைவாகத் தான் ராஜபக்சக்கள் துரத்தப்பட்டார்கள். ஆனால் கேள்வி என்னவென்றால் இந்த மக்கள் அதிகாரத்தை பிரதிநிதித்துவ ஜனநாயகம் அல்லாத வேறு எந்த வழிகளில் பிரயோகிப்பது? அல்லது இது பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிப்பதோடு சரியா?

இப்பொழுது மக்கள் எழுச்சிகள் திருப்புகரமான இடத்துக்கு வந்து விட்டன. இந்த எழுச்சிகளின் விளைவுகளை அடுத்தடுத்த கட்டத்துக்கு தூலமான கட்டமைப்புக்களாக மாற்றத் தவறினால் இந்த எழுச்சியின் கனிகள் அனைத்தும் மேற்கு நாடுகளின் சட்டைப்பைக்குள் போய்விடும். ஏற்கனவே கடந்த ஒன்பதாம் திகதிக்கு முன்புவரை தன்னெழுச்சிப் போராடடத்தின் கனிகளை ரணில் தன்னுடைய சட்டைப்பைக்குள் போட்டுக் கொண்டு விட்டார்.



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

கடந்த மூன்று மாதகால மக்கள் எழுச்சிகள் யாவும் ஒரு மையத்தில் இருந்து நெறிப்படுத்தப்படவில்லை. மேலிருந்து கீழ்நோக்கிய ஒரு மையத் தலைமைத்துவம் அங்கே கிடையாது. அப்படி ஒரு மையத் தலைமைத்துவத்தை கட்டியெழுப்புவதும் கடினம் என்று தெரிகிறது.

ஏனென்றால் அரகலிய எனப்படுகின்ற மக்கள் எழுச்சியில் சுமார் 70-க்கும் மேற்பட்ட அமைப்புக்களின் பங்களிப்பு உண்டு. அந்த அமைப்புகள் மத்தியில் தீவிர இடதுசாரிகள் தொடக்கம் தீவிர வலதுசாரிகள் வரை எல்லாத்தரப்பும் உண்டு. லிபரல்கள் உண்டு. தன்னார்வலர்கள் புத்திஜீவிகள், கருத்துருவாக்கிகள், படைப்பாளிகள், மதகுருக்கள் என்று பலதரப்புகளும் இணைந்த கதம்பமான ஒரு சேர்க்கை அது. இந்த எல்லாத் தரப்புகளையும் ஒரு பொதுச் சித்தாந்தத்தின் கீழ் ஒருங்கிணைப்பது கடினமானது. அது தான் அந்தக் கட்டமைப்பின் பலமும். அது தான் அந்தக் கட்டமைப்பின் பலவீனமும். அந்த பலவீனத்தின் விளைவுகளை இனி போராட்டக்காரர்கள் சந்திக்க (18ம் பக்கம் பார்க்க)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இனுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
24.11.1954

உதிர்வு
21.07.2020

## கொழும்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த

## திருமதி நளினி அழகராஜா

அன்பிலே சிறந்தவளாய் மண்ணிலே உதித்து
அமைவுற்ற இல்வாழ்வினில் நறுமணம் பரப்பி
இல்லத்தின் விருட்சமாய் பாசநிழல் தந்தாய்
உறவுகள் பேணிடும் கருணை வடிவமாய்
வாழ்ந்த என் குடும்பத் தெய்வமே
விண்ணக வாழ்வை நாடிச் சென்று
ஆண்டுகள் இரண்டு பறந்தோடிச் சென்றதனால்
என்றென்றும் உங்கள் பாசம் போற்றியே பணிந்தோம்!
என்றும் உங்களை நினைத்தே அஞ்சலி செய்கின்றோம்!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!
அன்னாரின் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கும்

அன்புக் கணவர், பிள்ளைகள் உறவுகள்


Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:



Vilosanan Sivatharman
Funeral Director
416-993-0826

• Vistation
• Funeral & Memorial Service
• Reception
• Burial • Cremation

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
• Lock in the cost at today's prices
• Convenient time payments
• Insured against early death

EMOTIONAL BENEFITS
• Letting your family know your wishes
• Peace of mind to you & your family
• Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

# அடுத்தது என்ன? என்ன செய்வது?

**இக்கட்டுரை 17 யூலை 2022இல் எழுதப்பட்டது. இக்கட்டுரையை வாசகர்கள் வாசிக்கும் போது பல அரசியல் திருப்பங்கள் நடந்திருந்தாலும் இக் கட்டுரையில் உள்ள கருத்துக்கள் உற்று நோக்கத்தக்கது.**

அரசியல் நிலைமாற்ற அதிரடிகளின் மத்தியில் ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளார். சரி, அடுத்து என்ன நடக்கப் போகிறது? நிலைமை சீரடையுமா? அல்லது மேலும் மோசமடையுமா? அவர் இந்தப் பதவியில் எவ்வளவு காலம் நீடிப்பார்? அதற்கு மக்களும் போராட்டக்காரர்களும் அனுமதிப்பார்களா? அல்லது அரசியலமைப்பின் பிரகாரமே எல்லாமே நடக்கப் போகிறதா? சபாநாயகர் விடுத்த ஏராளம் அறிவிப்புகளில் எவையெல்லாம் நடக்கும்? எவையெல்லாம் நடக்காது? அடுத்த பிரதமர் யார்? அடுத்து எப்படி ஆட்சிக் கட்டமைப்பு இருக்கும்? நடக்கும்? புதிய அமைச்சரவை உருவாக்கப்படுமா? அல்லது உள்ள அமைச்சரவையில் திருத்தம் நிகழுமா?

இப்படி ஏராளம் கேள்விகளோடு தான் நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் உள்ளனர். எந்தக் கேள்விக்கும் யாராலும் சரியான பதிலைக் காண முடியாது. காரணம், முடிவற்ற குழப்பத்திற்குள்ளாகியுள்ளது நாடு. குழப்பத்திலிருக்கும் போது எதைப் பற்றியும் சரியாகச் சிந்திக்கவும் முடியாது. எதிர்வு கூறவும் முடியாது.

இப்போதுள்ள நிலவரத்தின்படி எதிர்வரும் 20ஆம் திகதி ஜனாதிபதிக்கான தேர்தல் நடைபெறும் என்று தெரிகிறது. இதில் யார் யாரெல்லாம் போட்டியிடுவர் என்று கூற முடியவில்லை. ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவிதமான அறிவிப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்தப் பத்தியை எழுதிக் கொண்டிருக்கும் போது ஐமுனைப் போட்டி நடக்கும் என்று கூறப்படுகிறது. இது மேலும் கூடலாம். அல்லது குறையலாம்.

சரி அப்படி பலர் களத்தில் இறங்கினாலும் யாருக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் உண்டு என்பது அடுத்த கேள்வி. அவர் பதவிக்கு வந்தால் அடுத்து அமையவுள்ள அரசாங்கம் எப்படி இருக்கும்? அது எவ்வளவு காலம் நீடிக்கும்? என்பதெல்லாம் கேள்வியே. இப்படிக் கேள்விகளின் தொடர்ச்சியிலேயே நாடு தொங்கிக் கொண்டிருக்கிறது.

இதற்குப் பிரதான காரணம், நாட்டு நெருக்கடி, மக்களின் பிரச்சினை என்பவற்றைப் பற்றி யோசிப்பதை விட அவரவர் தமக்கான பதவியைப் பற்றிச் சிந்திப்பதேயாகும். அதைப்போலவே ஒவ்வொரு கட்சியும் அல்லது ஒவ்வொரு அணியும் தத்தமது நலனையோ முதன்மைப்படுத்திச் செயற்பட முனைகின்றன. இதனால் தான் ஜனாதிபதிக்கான போட்டி இந்தளவுக்கு விரிந்து அதிகரித்திருக்கிறது. இதே நிலைமை ஆட்சியிலும் அடுத்து நடக்கப் போகின்ற அமையப் போகின்ற அமைச்சரவையிலும் நடக்கும். ஆக மோசமான அரசியல்வாதிகளின் கைகளில் சிக்கி நாடு சீரழியவே போகிறது.

இதற்குள் பதில் ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க உடனடியாகவே நிலைமையைக் கட்டுப் படுத்தும் வகையில் சில நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார். இதில் முக்கியமானது இயல்பு நிலையை வழமைக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகள். குறிப்பாக சட்டத்தை அமுலாக்கம் செய்வது. இதன்படி அவர் படைகளையும் பொலிஸையும் களத்தில் இறக்கியிருக்கிறார். இதனால் தான் உடனடியாகவே அலரி மாளிகை, ஜனாதிபதி மாளிகை, பிரதமர் அலுவலகம், பாராளுமன்றச் சுற்று வட்டம் போன்றவற்றிலிருந்து போராட்டக்காரர் விலகும்படி நேர்ந்தது. இது கோட்டாபயவை விட ரணில் உறுதியானவர், எதையும் எதிர்கொள்ளக் கூடிய மனநிலை உடையவர் என்று தெரிகிறது.

ஆனாலும் இது எவ்வளவுக்கு நீண்ட காலச் சாத்தியத்தைத் தரும் என்பது கேள்வியே. ஏனென்றால் இன்னும் **GO Home Ranil** என்ற குரல்கள் அடங்கவில்லை. இது ஒரு புறமிருக்க, ரணில் உருவாக்க நினைக்கும் இயல்பு நிலையைக் குறித்து நோக்கலாம்.



முதலில் இயல்பு நிலை என்பது எது என்பதற்கு விளக்கம் தேவை. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இயல்பு நிலை என்பது எதிர்ப்பாளர்கள் அல்லது போராட்டக்காரர்கள் தமது எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கைவிட்டு வீட்டுக்குச் செல்வது என்றே கருதுகிறது. அது அப்படித் தான் கருதும். அதாவது அரசாங்கத்துக்கு நேரடியாக நெருக்கடியை அழுத்தத்தை இடைஞ்சலை எதிர்ப்பை வெளிக்காட்டுகின்ற தரப்பை அகற்றுவது அல்லது கட்டுப் படுத்துவது. இதனையே அது முதன்மையாகக் கொள்ளும் அதிகாரத் தரப்பின் உளவியல் அது. அதோடு அரசியல் உறுதிப்பாடு ஏற்பட்டு, அமைச்சரவை சீராக இயங்குவது. பாராளுமன்றம் வழமைக்குத் திரும்பிக் கூடுவது. அரச நிர்வாக இயந்திரம் ஒழுங்காக இயங்குவது என இது அமையும்.

மக்களுடைய நோக்கு நிலையில் இயல்பு நிலை என்பது வேறு. அது பொருளாதார நெருக்கடி தீருவது. அடுத்ததாக அரசியல் நெருக்கடி தணிவது என்பதாகும். இதைத் தீர்க்கக் கூடியவர்கள் யார் என்றே அவர்கள் பார்ப்பர். அதோடு அவர்கள் தணிந்து விடுவர். அதாவது, பெரும்பான்மையான மக்கள்.

எப்படியோ பதில் ஜனாதிபதியின் முயற்சியில் அல்லது அவருடைய நடவடிக்கையில் நிலைமையை வழமைக்குக் கொண்டு வர வேண்டுமானால் இரண்டு வழிகள் உண்டு. ஒன்று படைத்தரப்பையும் பொலிஸையும் பயன்படுத்தி அதிகாரத்தின் மூலமாக ஏறக்குறைய பலத்தின் மூலமாக அவருடைய நோக்கு நிலையில் இயல்பு நிலையை உருவாக்குவது. இது இன்றைய நிலையில் கொஞ்சம் கடினமான விசயம். கொஞ்சம் இறுக்கினால் அல்லது எங்காவது உராய்வு ஏற்பட்டால் அது அவர் மீதான எதிர்ப்பலையைப் படு வேகமாகக் கிளப்பி விடும். ஆனாலும் ரணில் விக்கிரமசிங்க கொஞ்சம் அனுபவம் உள்ள அரசியலாளர் என்பதால் அதற்கான நுட்பங்களைப் பயன்படுத்தி, சாத்தியங்களை எட்டுவதற்கு முயற்சிக்கக் கூடும். இப்பொழுதே அவர் இதில் கணிசமான அளவுக்கு முன்னேறியுள்ளார்.

அடுத்தது, மக்கள் சந்திக்கும் நெருக்கடிகளுக்கான தீர்வைக் கண்டு சனங்களின் கொதிப்பைத் தணிப்பது. இதற்கு உடனடியாக அவர் பல வேலைகளைச் செய்ய வேண்டும். எரிபொருள், எரிவாயு போன்றவற்றின் பற்றாக்குறையை நீக்கி பொதுப் போக்குவரத்து உட்பட அனைத்தையும் உறை நிலையிலிருந்து மீட்டெடுக்க வேண்டும். கூடவே ஏனைய வருவாயைப் பெறும் வகையிலான திட்டங்களை விரைந்து உருவாக்க வேண்டும். அத்துடன் கடன் உதவிகளை முடிந்தளவுக்குப் பெற்றுக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்வதன் மூலம் நிதிப் புழக்கத்தையும் பொருட் புழக்கத்தையும் அதிகரிக்க முடியும். இரண்டும் தாராளமாகினால் சனங்கள் இப்போதுள்ள அளவுக்கு அரசுக்கு எதிராக உற்சாகத்தோடு திரள மாட்டார்கள்.

ஆகவே அப்படியொரு சூழலில் சனங்களின் கொதிப்பு அடங்குமானால் இந்தளவுக்கு மக்களின் எழுச்சியோ, எதிர்ப்போ இருக்காது. இதை நன்கறிந்தவர் ரணில் விக்கிரமசிங்க. ஒரு உடன்படிக்கையின் மூலம் போர் தவிர்ப்பைச் செய்து, சமாதான முயற்சிக்கான பொறியில் புலிகளை வீழ்த்தியவர். போர் செய்ய முடியாத புலிகளால் தாக்குப் பிடித்து நிற்க முடியாது என்று அவருக்கு நன்றாகவே தெரியும். புலிகளின் பலம் என்பது அவர்களுடைய போரிடும் ஆற்றலே. ஆகவே அதைச் சரியாக மதிப்பிட்டு அதற்கு ஆணி வைத்தவர் அவர். அதன் மூலம் போரிடும் மனநிலையிலிருந்து வெளியேற்றி விலக வைத்து வேறு வாழ்க்கைக்குள் சமாதான கால வாழ்க்கைக்குள் திளைக்க வைத்து நெருக்கடியை உண்டாக்கியவர். அத்துடன் புலிகளுக்குள் கருணா — பிரபாகரன் பிளவையும் மிகச் சிம்பிளாக உருவாக்கியவர். இதற்கு யாரையெல்லாம் எப்படிக் கையாள முடியுமோ அவர்களையெல்லாம் மிகச் சாதுரியமாகக் கையாண்டு வெற்றியடைந்தவர்.

இந்த மாதிரியான அனுபவங்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கைகூடக் கூடியவை. ஆகவே அவர் இனி வரும் நாட்களை தனக்கானதாக மாற்றி ஆடவே யோசிப்பார். சர்வதேச சமூகமும் இலங்கை நிலவரத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருமாறு பொதுவாகக் கோரியுள்ளது. ரஸ்யா, அமெரிக்கா, சீனா, இந்தியா தொடக்கம் அனைத்து நாடுகளும் இதைக் கேட்டுள்ளன. ஐ.நாவும் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது. உள் நாட்டிலும் மத அமைப்புகள் தொடக்கம் சட்டத்தரணிகள் சங்கம், மற்றும் சில பல தொழிற்சங்கள் வரையில் நாட்டின் நிலைமை விரைவாகச் சீரடைய வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள் அல்லது அப்படிக் கேட்க வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால் பதில் ஜனாதிபதி எதிர்பார்ப்பதற்கேற்ற மாதிரி இந்த ஆட்டக் களம் இருக்குமா என்பது கேள்வியே. ஏனெனில் இன்னும் சூழலில் கொதி நிலை ஆறவில்லை. இப்போதைக்கு உடனடியாக அது ஆறக்கூடிய நிலையிலும் இல்லை. அதற்குள் போராட்டக்காரர்களின் திட்டப்படி ரணில் விக்கிரமசிங்க பதவி விலகினால் அடுத்தது என்ன என்ற கேள்வியும் உண்டு. புதிதாக அந்த இடத்துக்கு வருகின்றவர் எப்படிச் செயற்படப் போகின்றார் என்பதிலேயே இந்தக் கேள்வி எழுகிறது. ஏனென்றால் எந்தத் தரப்பும் இந்த நெருக்கடிக்கு என்ன தீர்வு? அதை எப்படிக் காண்பது? அதற்கு எவ்வளவு காலம் வேண்டும் என்று எங்கும் தெரிவிக்கவில்லை.

இதேவேளை யார் அதிகாரத்துக்கு வந்தாலும் ஆட்சி கலைக்கப்பட்டு தேர்தல் மூலமாகப் புதிய ஆட்சி ஒன்று

**கட்டுரையாளர்:**
**கிளிநொச்சியில் இருந்து**
**- கருணாகரன் -**



அமைந்தால் தான் ஏதாவது புதிதாக நடக்கும் என்று பலரும் நம்புகிறார்கள். அது ஓரளவு உண்மையே. இப்போதுள்ள பாராளுமன்ற முறைக்குள்ளும் பாராளுமன்றத்துக்குள் இருக்கும் ஆட்களுக்குள்ளும் (எம்பி மாருக்குள்ளும்) இருந்து எந்த உருப்படியான தீர்வையும் நன்மைகளையும் பெற முடியாது. ஆனால் உடனடியாக மாற்று ஒன்றை எதிர்பார்க்க முடியாது. அதைச் செய்வது கூட அவ்வளவு சுலபமானது அல்ல. மிக நுட்பமாக ஒருங்கிணைந்து ஆற்ற வேண்டிய மிகப் பெரிய பணி அது. அதற்கு மக்கள் எந்தத் தரப்பை —யாரை தேர்வு செய்யப் போகிறார்கள் என்ற கேள்வியும் உண்டு. மீண்டும் பழைய தவறானவர்களையே தெரிவு செய்தால் மறுபடியும் நெருக்கடியும் தவறுகளுமே விளையும். ஆகவே இப்பொழுது அரசாங்கத்துக்கும் அரசியற் கட்சிகளுக்கும் ஆட்சித் தலைவர்களுக்கும் மட்டுமல்ல, மக்களுக்கும் பாரிய பொறுப்புகள் வந்துள்ளன. நினைத்த மாதிரி, கண்ட பாட்டுக்கு அதிகாரத்தை யாருக்கும் வழங்கக் கூடாது என்ற உண்மை உணர்த்தப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஸவுக்கு மட்டுமல்ல. அதற்கு முன்னிருந்தவர்களுக்கும் அதிகாரத்தை வழங்கி விட்டுப்பட்ட அனுபவங்களை மக்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். இது அசுரனுக்கு அவசரப்பட்டு வரமளித்து விட்டு வில்லங்கப்படும் தேவர்களின் நிலைக்கு ஒப்பானது. வரமளிப்பதற்கு முன்பு அந்த வரத்தைப் பெறுகின்றவர் தகுதியானவர்தானா? அவர் உண்மையிலேயே காத்தற் கடவுள் தானா? அல்லது அழித்தற் கடவுளா (பிசாசா) என்று ஒன்றுக்குப் பல தடவை சிந்திக்க வேண்டும். அப்படிச் சிந்தித்த பிறகே யாருக்கு வாக்களிப்பது? எதற்கு வாக்களிப்பது? யாரை ஆதரிப்பது? எதனை ஆதரிப்பது? என்றெல்லாம் தீர்மானிக்க வேண்டும்.

எழுந்தமானமாக அலையெனத் திரண்டு அவசரப்பட்டு அல்லது பழைய பழக்கத்தில் பொருத்தமற்றவர்களைத் தேர்வு செய்து அவர்களுக்கான அதிகாரத்தைக் கொடுத்து விட்டால், அதிலிருந்து அவர்களை விலக்குவதற்குப் பெரும்பாடு பட வேண்டும் என்ற உண்மை நிரூபிக்கப்பட்டுள்ளது. வளர்த் கடா மார்பில் பாய்கிறது என்பதற்கு ஒப்பானது இது. என்பதால் தொடர்ந்தும் தொடர்ந்தும் மக்கள் தவறிழைக்கக் கூடாது. தவறுகளிலிருந்து பாடத்தைப் படித்துக் கொள்ள வேண்டும். முக்கியமாக இனவாதத்தை யாரும் முன்னிறுத்தி நாட்டைப் பாதுகாக்க முடியாது. வேண்டுமானால் அவர்களுடைய வயிற்றை நிரப்பிக் கொள்ளலாம். அவர்களுடைய வாழ்க்கையை வளமாக வைத்திருக்கலாம். இதுதான் நடந்து கொண்டுமிருக்கிறது.

இப்பொழுது நாட்டின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அதிகாரத் தரப்பை மாற்றும்' (22ம் பக்கம் பார்க்க)

# சரிக்கப்பட்ட சாம்ராஜ்யம்

ராஜபக்ஷ ஆட்சியை ஆடியோடு பெயர்த்து போட்டிருக்கிறது. அரபு வசந்தத்தை விட வீரியமாக கிளர்ந்து எழுந்த ஜீலை-9 மக்கள் புரட்சி

கடந்த தசாப்தத்தின் தொடக்கத்தில் அரபு வசந்தம் மிகப் பிரபலமான ஒன்றாக விளங்கியது.

துனிசியாவில் தொடங்கிய அரபு வசந்த புரட்சி, மத்திய கிழக்கிலுள்ள அரபு நாடுகள் பலவற்றில் ஆட்சிகளை மாற்றியது.

நீண்டகாலம் அதிகாரத்தில் ஒட்டிக் கொண்டிருந்தவர்களை தூக்கியெறியக் காரணமாக இருந்தது.

2010 டிசம்பரில் தொடங்கி 2011 நடுப்பகுதி வரையான காலப்பகுதிக்குள், நீண்டகாலமாக ஆட்சியில் இருந்த அரசாங்கங்களின் மீது வெறுப் படைந்த மக்கள், கிளர்ச்சிகளில் இறங்கினர்.

அதன் காரணமாக முதலில் துனிசியாவில் ஆட்சி தூக்கியெறியப்பட்டது. அடுத்து லிபியா, எகிப்து, யேமன், சிரியா, பஹ்ரெய்ன் போன்ற நாடுகளில் நீண்ட காலமாக ஆட்சியில் இருந்த ஆட்சியாளர்களுக்கு எதிராக புரட்சிகள் வெடித்தன.

அவற்றில், சிரியாவில் மட்டும் பஷார் அல் அசாத் அரசாங்கம் தப்பிக் கொண்டது. ஆனால் அந்த நாடு நீண்ட மோசமானதொரு உள்நாட்டுப் போருக்குள் சிக்கியது. ஏனைய நாடுகளின் அரசாங்கங்கள் தூக்கியெறியப்பட்டு ஆட்சியாளர்கள் விரட்டியடிக்கப்பட்டனர்.

அரபு வசந்தம், ஏனைய பல அரபு நாடுகளிலும், பெரும் தாக்கத்தை செலுத்தியது. சில இடங்களில் அரசாங்கங்கள் பதவியிறங்க நேரிட்டது. சில இடங்களில் உள்நாட்டுப் போர்கள் உருவாகின.

அரபுலகப் புரட்சியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்தது, சமூக ஊடகங்கள் தான். மேற்குலகம், குறிப்பாக அமெரிக்காவே சமூக ஊடகங்களின் ஊடாக இந்தப் புரட்சியை ஊக்குவித்தது என்ற கருத்து இன்றைக்கும் நிலவுகிறது.

கோட்டா அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் போராட்டம் தொடங்கிய போது அரபு வசந்தம் போல இலங்கையில் நடக்கும் என்று எவரும் கற்பனை செய்ய வேண்டாம் என்று அரசாங்கத் தரப்பில் இருந்த பலர் எச்சரித்தனர்.

அதாவது ஆட்சியாளர்களுக்கு எதிரான மக்கள் புரட்சி ஏற்பட்டு, ஆட்சியை தூக்கியெறியும் நிலை உருவாகாது என்று அவர்கள் உறுதியாக நம்பினார்கள். அவ்வாறான நிலை ஒன்றுக்கு, அரசாங்கம் இடமளிக்காது என்ற கருத்தும் காணப்பட்டது.

துனிசியாவில், லெபனானில் ஏனைய அரபு நாடுகளில் மக்கள் புரட்சியை தொலைக்காட்சிகளின் பார்த்த மக்களுக்கு இலங்கையிலும் அவ்வாறு நடக்கும் என்று எவரும் கற்பனை செய்திருக்கவில்லை.

அரபு வசந்தத்தை விட வீரியமான போராட்டங்களை இன்று நாடு சந்தித்திருக்கிறது. அரபு வசந்த புரட்சியில், ஆட்சிகள் தூக்கியெறியப்பட்டது போலவே, இங்கும் ராஜபக்ஷ அரசாங்கம் விரட்டியடிக்கப்பட்டிருக்கிறது.

அரபு வசந்தம் இலங்கையில் சாத்தியமில்லை, அதற்கு அனுமதிக்க மாட்டோம் என்றவர்கள் வாய்பிளந்து நிற்கிறார்கள்.

அரபு வசந்தத்தை ஏற்படுத்த சிலர் முயற்சிக்கின்றனர், அதற்கு அனுமதிக்க மாட்டோம் என்று அரசாங்கத்தை விட்டு வெளியேறிய பின்னரும், விமல் வீரவன்ச கூறியிருந்தார்.

உலக அரங்கில் காலத்துக்குக் காலம் சர்வாதிகாரிகளும் மக்களின் எண்ணங்களையும், உரிமைகளையும் மதிக்காமல் அவர்களை வதைத்த ஆட்சியாளர்களும், இவ்வாறான புரட்சிகளின் மூலம் தூக்கியெறியப்பட்டு வந்திருக்கிறார்கள்.



1979இல் ஈரானில் ஷா மன்னரின் ஆட்சி 1986இல் பிலிப்பைன்சில் மார்கோசின் ஆட்சி, 1989 தொடக்கம் 91 வரையான காலப்பகுதியில், சோவியத் ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த மற்றும் அதன் கூட்டாளி நாடுகளாக இருந்த லத்வியா, லிதுவேனியா, எஸ்தோனியா, ருமேனியா, பல்கேரியா, உள்ளிட்ட பல நாடுகளில் மக்கள் புரட்சிகளின் மூலம் ஆட்சியாளர்கள் தூக்கியெறியப்பட்டனர்.

சர்வாதிகாரப் போக்கும், நீண்டகால கொடுங்கோல் ஆட்சியும், அதிகாரத்துக்கு எதிரான மக்கள் கிளர்ச்சிக்கும் ஜனநாயக எழுச்சிக்கும் வழி வகுத்திருக்கிறது.

அவ்வாறான வரலாற்று நிகழ்வுகளுக்கு இணையாகவே, ராஜபக்ஷ ஆட்சியை ஆடியோடு பெயர்த்து போட்டிருக்கிறது, ஜீலை-9 மக்கள் புரட்சி. ஏனைய நாடுகளின் மக்கள் புரட்சிகளின் போது பெருமளவில் இரத்தம் சிந்தப்பட்ட வரலாறு உள்ளது.

ஆனால் ஜீலை-9 புரட்சி அதிகளவில் இரத்தம் சிந்தாத ஒன்றாகவும், கட்டுப்பாடுகள் மிக்கதாகவும், ஜனநாயகம் மற்றும் அமைதி வழிக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகவும் இருந்தது.

ஜீன் 9ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷ பதவி விலக காரணமான போராட்டங்களின் தொடர்ச்சியாகவே இது இடம் பெற்றது.

இந்த இரண்டு போராட்டங்களுக்கும் இடையில் ஒரு மாத கால இடைவெளி இருந்தது. அந்தக்கால கட்டத்தில் போராட்டம் நீர்த்துப் போய்க் கொண்டிருந்த தோற்றப்பாட்டையும் உருவாக்கியது.

ஆனாலும், ஜீலை-9 புரட்சி முன்னொரு போதும் இலங்கை வரலாற்றில் இடம் பெறாத ஒன்றாக அமைந்து விட்டது.

இந்தப் புரட்சியை மேற்குலக நாடுகள் எதிர்பார்த்திருந்தன. இலங்கை நிலவரங்களை காரணம் காட்டி மேற்குலக நாடுகள் பலவும், பயண எச்சரிக்கைகளை வெளியிட்டிருந்தன.

மக்கள் புரட்சி வெடிக்கும் அனுமானங்களை அடிப்படையாக கொண்டு தான் அந்தப் பயண எச்சரிக்கைகள், வெளியிடப்பட்டிருக்கின்றன.

அதேவேளை உலகளவில் நிகழ்ந்த மக்கள் புரட்சிகளின் போது, ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் அல்லது சர்வாதிகாரிகள், தங்களின் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்கு கடைசி வரையில் படைபலத்தைப் பயன்படுத்தியிருந்தார்கள். ஆனால் இலங்கையில் நிலைமை அவ்வாறானதாக இருக்கவில்லை. அரச படைகளைக் கொண்டு ராஜபக்ஷவினர் ஆர்ப்பாட்டங்களையும், போராட்டங்களையும் இரும்புக் கரம் கொண்டு அடங்கியிருக்க முடியும்.

அதற்கான வாய்ப்புகளும் சில நாட்களுக்கு முன்னர் வரை காணப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை கடந்த 7ஆம் திகதி அவசரமாகச் சந்தித்த கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மக்கின்னன், ஜனநாயக போராட்டங்களை அரசாங்கம் மதிக்க வேண்டும் என்று நேரில் வலியுறுத்தியிருந்தார்.

இந்த முக்கியமான நேரத்தில், அமைதியான போராட்டத்திற்கான ஜனநாயக உரிமை, நாடு முழுவதும் மதிக்கப்பட வேண்டும் என்றும் அவர், பின்னர் ருவிட்டரில் பதிவிட்டிருந்தார்.

அதேவேளை அமெரிக்க தூதுவர் ஜூலி சங், ஜீலை 8ஆம் திகதி ருவிட்டரில் இட்டிருந்த பதிவில், அமைதியான எதிர்ப்பாளர்களுக்கு, இடம் மற்றும் பாதுகாப்பை வழங்குமாறு, இராணுவம் மற்றும் பொலிஸுக்கு நினைவுட்டுவதாக குறிப்பிட்டிருந்தார்.

வன்முறை ஒரு போதும் தீர்வாக அமையாது எனவும் போராட்டம் நடத்தப் போகிறீர்கள் என்றால், அமைதியான முறையில் போராட்டத்தை நடத்துமாறும் அவர் அந்தப் பதிவில் குறிப்பிட்டிருந்தார்.


இரண்டு தரப்பையும் கண்டிப்புடன் கையாளுவது போன்றிருந்த அந்தப் பதிவுகள், அரசாங்கத்துக்கு குறிப்பாக அரச படைகளுக்கும் பொலிசாருக்கும் அழுத்தம் கொடுக்கும் வகையில் அமைந்திருந்தது.

அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளின் இந்த அழுத்தங்களை மீறி கோட்டாபய ராஜபக்ஷ இராணுவத்துக்கும், பொலிஸுக்கும் உத்தரவுகளைப் பிறப்பித்திருக்க முடியும். ஆனால், அது அவருக்கோ அவரது அரசாங்கத்துக்கோ அது பாதுகாப்பளிப்பதாக இருக்காது என்பது கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நன்றாகவே தெரியும்.

போராட்டங்களை இரும்புக் கரம் கொண்டு அடக்கினால், மேற்குலகம் அதற்கு எவ்வாறு பிரதிபலிக்கும் என்பது அவருக்குத் தெரியாததல்ல.

குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளை மட்டும் இப்போது நம்பியிருக்கும் இலங்கைக்கு அது

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
-கேணல் ஹரிகரன் -



கிட்டாமல் போனால், எதையும் செய்ய முடியாமல் போகும் ஆபத்து இருந்தது. சர்வதேச நாணய நிதியத்தை பகைத்துக் கொண்டு அரசாங்கத்தை முன்னெடுக்க முடியாது. அவ்வாறு செய்வதை விட அடங்கிப் போவது நல்லது என்று அவர் கருதியிருக்கிறார்.

அது போலவே, ஜனாதிபதி பதவியில் இருந்து விலகிய பின்னர், நாட்டில் இருக்கும் எண்ணம் கோட்டாவுக்கு இல்லை. அவரது மகன் அமெரிக்காவில் உள்ள நிலையில், தனது இறுதிக் காலத்தை அங்கேயே கழிக்கவும் விரும்பினார்.

இவ்வாறான நிலையில், நாட்டில் இரத்தக் களரியை ஏற்படுத்தி விட்டு, நீடித்து அரசியல் செய்யவும் முடியாது, அமெரிக்காவுக்குள் கால் வைக்கவும் முடியாதென்பதை கோட்டாபய ராஜபக்ஷ அறிந்திருந்தார்.

அதனால் தான் ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் போன்றவற்றை மக்கள் படை கைப்பற்றும் போது அரச படைகள் செயலற்று நின்றன.

சில துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், தாக்குதல் சம்பவங்கள் பதிவாகியிருந்தாலும், இலங்கையின் மக்கள் புரட்சி ஒப்பீட்டளவில் அமைதியானது. அந்த அமைதி தொடர்ந்து நீடிப்பது தான் சர்வதேச ஆதரவையும், அனுதாபத்தையும் தக்க வைத்துக் கொள்ளும்.

# நரியைப் பரியாக்குவது?

(15ம் பக்கத் தொடர்ச்சி) வேண்டியிரு க்கும். கடந்த மூன்று மாதகாலப் போராட்டத்தில் பொதுமக்களின் நம்பிக்கைகளை வென்றெடுக்கவல்ல தலைமைகள் மேலெழவில்லை. ஆர்ப்பாட்டக்காரர்கள் மத்தியில் இருந்து பேச்சாளர்கள் சிலர் வெளித் தெரிய வந்திருக்கிறார்கள். ஆனால் தலைவர்கள் என்று வர்ணிக்கத் தக்க யாரையும் காண முடியவில்லை. தலைவர்கள் இல்லாத மக்கள் எழுச்சி எதில் போய்முடியும்? நிறுவன மயப்படுத்தப் பட்ட தெளிவான இலக்குகளைக் கொண்ட ஒரு தலைமைத்துவத்தின் கீழ் முன்னெடுக்கப்படாத மக்கள் எழுச்சிகள் ஒன்றில் நீர்த்துப் போகும். அல்லது திசை மாற்றப்படும். அல்லது அவற்றின் கனி களை யாராவது கவர்ந்து சென்று விடுவார்கள்.

ஒரு மையத்தின் கீழ் கட்டமைக்கப்படாத மக்கள் எழுச்சிகள் அவை என்பதனால் தான் அங்கே ஊடுருவல்கள் நிகழ்கின்றன. ஆர்ப்பாட்டக்காரர்கள் மத்தியில் பிரிவினைகள் தூண்டி விடப்படுகின்றன. மோதல்கள் இடம் பெறுகின்றன. அது மட்டுமல்ல, நாடாளுமன்றத்தை முற்றுகையிடும் முடிவு யாரால் எடுக்கப்பட்டது என்ற கேள்வி உண்டு.

எனவே ஆர்ப்பாட்டக்காரர்கள் மத்தியில் இருந்து துலக்கமான தலைமைகளோ, பலமான நிறுவனக் கட்டமைப்போ உருவாகாத வரை இந்த ஆர்ப்பாட்டங்களின் முடிவில் பிரதிநிதித்துவ ஜனநாயக கட்ட மைப்புகள் செயலிழக்கும் பொழுது அவற்றை மாற்றீடு செய்வது யார்? எதன் மூலம் மாற்றீடு செய்வது? பொருளாதார நெருக்கடிகளை எதிர் கொள்வதற்கு முக்கிய முன் நிபந்தனை ஒரு ஸ்திரமான அரசாங்கம். அரசாங்கம் ஸ்திரமிழக்கும் பொழுது பொருளாதார நெருக்கடி மேலும் தீவிரமடையும்.

இதில் தமிழ்த்தரப்பின் நோக்கு நிலையில் இருந்து பார்த்தால், யாப்பும் நாடாளு மன்றமும் ஏறக்குறைய செயலிழந்து காணப்படும் ஒரு காலகட்டத்தில் யாப்பை தமிழ் நோக்கு நிலையில் இருந்து பல்லினத் தன்மை மிக்கதாக கட்டி எழுப்ப வேண்டும் என்ற கோரிக்கைகளை விட்டு க்கொடுப்பின்றி இறுக்கமாக முன் வைக்க வேண்டிய ஒரு கால கட்டம் இது. ஒரு இடைக்கால ஏற்பாட்டில் தமிழ்த்தரப்பு பங்களிப்பதா இல்லையா என்ற விவாதங் களை விடவும் அதிகம் கவனம் செலுத்தப்பட வேண்டிய ஒரு பரப்பு அது.

# இந்தியாவுக்கு அருகில் ஒரு கிளர்ச்சியா?

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
– யசீந்திரா –



ராஜபக்சக்களை அதிகாரத்திலிருந்து அகற்றுதல் என்னும் இலக்குடன் ஆரம்பிக்கப்பட்ட தென்னிலங்கை கிளர்ச்சியானது, சற்றும் எதிர்பாராத வகையில் உத்வேகத்துடன் தொடர்கின்றது.

கிளர்சியாளர்களின் முதலாவது இலக்கு நிறைவேறி விட்டது. ராஜபக்சக்களின் ராம்ராஜ்யத்தை சரித்து விட்டனர். கோட்டபாயவின் வெளியேற்றத்துடன் ராஜபக்சக்களின் ஆட்டம் முடிவுக்கு வந்துவிட்டது. ஆனாலும் கிளர்ச்சியாளர்கள் தொடர்ந்தும் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர்.

முதலில் கோட்டபாய ராஜபக்சவை இலக்கு வைத்து கிளர்ச்சியை ஒருங்கிணைத்தவர்கள் தற்போது, ரணில் விக்கிரமசிங்கவை இலக்கு வைத்து கிளர்ச்சியை தீவிரப்படுத்தி வருகின்றனர். இதன் ஆரம்பக் கட்டமாகவே பிரதமர் அலுவலகத்தை தங்களது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். தற்போது அவற்றிலிருந்து வெளியேறியிருந்தாலும் கூட, தங்களால் எவ்வேளையிலும் அரசாங்கத்தை முடக்க முடியுமென்பதே அவர்கள் கூற முற்படும் செய்தியாகும். அவர்களின் அடுத்த இலக்கு நாடாளுமன்றமாகும்.

விடயங்களை தொகுத்து நோக்கினால், கிளர்சியாளர்களின் இலக்கு ராஜபக்ச ஆட்சியாளர்களை அகற்றுவது மட்டும் தானா அல்லது இலங்கைத் தீவின் அதிகாரத்தை முழுமையாக கைப்பற்றுவதா என்னும் கேள்வி எழுகின்றது?

ஏனெனில் கிளர்சியாளர்களால் முன்வைக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகள் பல நடைமுறைக்கு சாத்தியமானவைகள் அல்ல. மாறாக, தற்போதுள்ள அரசியல் கட்டமைப்புக்கள் மூலம் நடைமுறைப்படுத்த முடியாதவை. இதனை தெரியாமல் முன் வைக்கின்றனரா அல்லது அரசியல் கிளர்ச்சியை தொடர்வதற்கான ஒரு உபாயமாக முன் வைக்கின்றனரா?

சிறிலங்காவின் அரசியல் வரலாற்றில் தென்னிலங்கை இரண்டு ஆயுத கிளர்ச்சிகளை கண்டிருக்கின்றது. 1971 மற்றும் 1989இல் ஜே.பி.வி இரண்டு முறை அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தது. 1971 கிளர்ச்சியை அடக்குவதற்கு அப்போதைய சிறிலங்காவின் தலைவர், சிறிமாவோ பண்டாரநாயக்க, இந்தியாவின் உதவியை நாடியிருந்தார்.

இந்தியாவின் உதவி இல்லாவிட்டால் ஜே.வி.பி கிளர்சியாளர்களை இராணுவ ரீதியில் அடக்க முடியாமல் போயிருக்கும். தோல்வியடைந்த ஜே.வி.பியினர் மீளவும் 1989இல், அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான கிளர்ச்சியை முன்னெடுத்திருந்தனர். இதன் போது இந்திய எதிர்ப்பே ஜே.வி.பியின் பிரதான இலக்காக இருந்தது. இரண்டு கிளர்ச்சிகளின் போதும் மோசமான தோல்வியை சந்தித்த ஜே.வி.பி, பின்னர் தங்களை ஜனநாயக ரீதியானதொரு கட்சியாக உருமாற்றிக் கொண்டது. ஜே.வி.பியினர், தென்னிலங்கை பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் தங்களுக்கான செல்வாக்கை தக்க வைத்துக் கொள்வதில் ஆரம்பத்திலிருந்தே பிரதான கவனம் செலுத்தி வந்திருக்கின்றனர்.

இடதுசாரி சிந்தனைகளால் ஈர்க்கப்பட்ட தலைமுறையைச் சேர்ந்தவர்களின் வழிகாட்டுதலில் தான் தற்போதைய கிளர்ச்சியும் திட்டமிடப்பட்டிருக்கின்றது. ஜே.வி.பி தலைவர் ருகுணு விஜயவீர தலைமையிலான சிந்தனைகளால் ஈர்க்கப்பட்ட ஒரு தலைமுறையினரும் இதில் பிரதான பங்கு வகிக்கின்றனர்.

கோல்பேஸ், கோட்டா கோ கோம் எதிர்ப்பு அணியில் பல தரப்பினரும் இருந்ததாக சொல்லப் பட்டாலும் கூட, தற்போது இடம் பெற்று வரும் கிளர்ச்சியில், முற்றிலும் இடதுசாரி சிந்தனைகளால் ஈர்க்கப்பட்டவர்களே பெருபாண்மையாக இருக்கின்றனர். ஒரு வேளை கொழும்பு மைய சிவில் சமூகக் குழுக்களோ அல்லது அரசு சாரா நிறுவனங்களை சேர்ந்தவர்களோ இதில் முன்னணியில் இருந்திருந்தால், ரணிலால் அவர்களை இலகுவாக கையாண்டிருக்க முடியும். அத்துடன் அவ்வாறானவர்கள் இந்தளவிற்கு துணிகரமாக இதனை முன்னெடுக்கவும் மாட்டார்கள். கிடைக்கும் தகவல்களின்படி, இந்த கிளர்ச்சியின் பின்னாலிருப்பவர்களில், முதன்மையானவர்களாக, குமார் குணரட்ணம் தலைமையிலான முன்னணி சோசலிச கட்சியை சேர்ந்தவர்களே இருக்கின்றனர். இதனை குமார் குணரட்ணமும் மறுக்கவில்லை அத்துடன், இடதுசாரி சிந்தனைகளை வரித்துக் கொண்டிருக்கும், அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியமும் பிரதான பங்கு வகிக்கின்றது. பல தொழிற்சங்கங்களும் இதில் பங்கு வகிக்கின்றன. தென்னிலங்கை தொழிற்சங்கள் அனைத்துமே பெருமளவிற்கு இடதுசாரித்துவ அதே வேளை இந்திய எதிர்ப்பு சிந்தனைப் போக்குடையவையாகும்.



அதே வேளை ஜே.வி.பியின் ஆதரவைப் பெற்றிருக்கும் ஒரு அணியினரும் இதன் பின்னாலிருக்கின்றனர். ஆனால் புரட்சிகர அரசியல் மூலம் அதிகாரத்தை கைப்பற்றுதல் என்னுமடிப் படையில் செயற்படக்கூடிய, அனுபமுள்ளவராக குமார் குணரட்ணமே இருக்கின்றார்.

தற்போது இடம் பெற்று வரும் கிளச்சியை எவ்வாறு புரிந்து கொள்வது என்பது முக்கியமானது. ஆரம்பத்தில் ராஜபக்சக்களை அகற்றுதல் என்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது. இப்போது அவர்கள் முன்வைத்திருக்கும் நிபந்தனைகள் எவையுமே ஆரம்பத்தில், அவர்களிடம் இருந்திருக்கவில்லை. ஆனால் இம்மாதம் ஜனாதிபதி மாளிகையை கைப்பற்றிய பின்னர் தான், அவர்களில் சில மாற்றங்கள் தெரிந்தன. தங்களை தவிர்த்து அரசியல்வாதிகள் எவரும் இயங்க முடியாதென்னும் நிலைப்பாட்டிற்கு தாவினர். ஜனாதிபதி மாளிகை கிளர்சியாளர்களின் கைகளில் விழுந்ததை தொடர்ந்தே, கோட்டபாய ராஜபக்ச பதவி விலகும் முடிவை எடுத்திருந்தார். அதுவரையில், தனது பதவிக் காலம் முடியும் வரையில், தான் வெளியேறப் போவதில்லையென்னும் முடிவிலேயே இருந்தார். ஆனால் கிளர்ச்சியாளர்கள் ஜனாதிபதி மாளிகையை கைப்பற்றியை தொடர்ந்து, கோட்டபாயவின் அனைத்து கனவும் கலைந்தது.

இந்த இடம் தான் கிளர்சியாளர்களுக்கு உற்சாகத்தை வழங்கியிருக்க வேண்டும். கோட்டபாயவை வெளியேற்றும் அவர்களின் முயற்சியின் போது இராணுவம் குறுக்கிடவில்லை. இத்தனைக்கும் விடுதலைப் புலிகளை போரில் தோற்கடித்த ஒரு இராணுவ வீரன் என்னும் தகுதியே கோட்டபாயவின் பலமாக இருந்தது.

ஆனால் அவ்வாறான ஒருவருக்கு எதிராக, கிளர்ச்சியாளர்கள் ஒன்று திரண்ட போது, இராணுவம் அவரை காப்பாற்ற முயற்சிக்கவில்லை. தப்பியோடச் செய்வதன் மூலமே கோட்டபாய பாதுகாக்கப்பட்டார். கோட்டபாய தப்பியோடிமையானது, அதுவரையான கிளர்ச்சி நடவடிக்கையில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியது.

இடதுசாரிச் சிந்தனைகளின் வழியாக அதிகாரத்தை கைப்பற்றுதல் என்பது சோவியத் கால, உலக ஒழுங்கிற்குட்பட்ட ஒன்று. இலங்கைத் தீவில் இடம்பெற்ற சிங்கள மற்றும் தமிழ் ஆயுத கிளர்சிகளில் இடதுசாரி சிந்தனைகள் பெரியளவில் செல்வாக்குச் செலுத்தியிருந்தன. சோவியத் பாணி சோசலிச சிந்தனைகளின் வழியாகவே, ஜே.வி.பியானது, தென்னிலங்கையின் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான ஆயுத கிளர்சியை முன்னெடுத்திருந்தது. இதே போன்று, தமிழ் மக்களுக்கான தனிநாட்டுக் கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டு உருவாகிய ஆயுத விடுதலை இயக்கங்களில், விடுதலைப் புலிகள் மற்றும் டெலோ தவிர்ந்த இயக்கங்கள், தங்களை இடதுசாரிகளாகவே அடையாளப்படுத்திக் கொண்டனர். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ மக்கள் விடுதலை கழகம் மற்றும் ஈரோஸ் ஆகியவை தங்களை இடதுசாரிகளாகவே அடையாளப்படுத்திக் கொண்டனர். விடுதலைப் புலிகள் அமைப்பு மற்றும் டெலோ ஆகியவை தங்களை கருத்தியல் அடிப்படையில் அடையாளப்படுத்தவில்லை. ஆனால், இங்கு குறிப்பிடப்பட்ட பிரதான இயக்கங்கள் அனைத்துமே, பிற்காலத்தில், இந்தியாவிடம் ஆயுதப் பயிற்சியை பெற்றுக் கொண்டன. இதற்கு பின்னர் இயக்கங்களின் மத்தியில் இடதுசாரி வலதுசாரி என்னும் பிளவுகள் கரைந்து போயின.

தென்னிலங்கையை பொறுத்தவரையில் இடதுசாரித்துவ செல்வாக்கு என்பது தொடர்ந்தும் இருந்து வருகின்றது. குறிப்பாக சிங்கள பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் இடதுசாரித்துவ ஈர்ப்பு கணிசமான செல்வாக்கை பெற்றிருக்கின்றது. ஆனாலும் சிங்கள இடதுசாரித்துவத்தை சிங்கள பௌத்த தேசியவாதத்திலிருந்து பிரித்துப் பார்ப்பது கடினம். குறிப்பாக விடுதலைப்

(22ம் பக்கம் பார்க்க)



# அ.தி.மு.க.வை கைப்பற்றிய எடப்பாடி!

கட்டுரையாளர்:- தமிழகத்தில் இருந்து

– குடந்தையான் –

தமிழக அரசியல் களம் மீண்டும் ஒரு முறை அரசியல் இயக்கத்தின் உட்கட்சி பூ சல் காரணமாக உச்சகட்ட பரபரப்பை எட்டி சற்று ஓய்வடைந்திருக்கின்றது.

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக தமிழகத்தை ஆளும் இரு முனை திராவிட கட்சிகளின் ஒரு முனையாக திகழ்வது அ.தி.மு.க. மறைந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரால் ஆரம்பிக்கப்பட்டு மறைந்த புரட்சித் தலைவி ஜெயலலிதாவால் கட்டி காக்கப்பட்ட இந்த அரசியல் இயக்கம், அவர்களின் மறைவிற்குப் பிறகு வழிநடத்த மக்கள் செல்வாக்குப் பெற்ற தலைவர்கள் இல்லாமல் தள்ளாடியது.

கடந்த காலத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மூத்த, முன்னணி நிர்வாகிகளின் பெரும்பான்மையான ஆதரவுடன் எடப்பாடி பழனிச்சாமி முதல்வராக பொறுப்பேற்றுக் கொண்டார். முதல்வரானதும் கட்சியில் தன் ஆதிக்கத்தை வளர்த்தெடுக்க தொடங்கினார்.

தற்போது தனக்கு சிம்ம சொப்பனமாக விருந்த பன்னீர்செல்வத்துக்கு எளிதாக வலை விரித்து, எதிர்த்து வீழ்த்தியிருக்கிறார். இனி அ.தி.மு.க. எடப்பாடி பழனிச்சாமி என்பவரின் ஒற்றை தலைமையில் இயங்கும் கட்சி என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. தற்போது ஒற்றை தலைமையை ஏற்றுள்ள அ.தி.மு.க., தொடர்ந்து வலிமையான தி.மு.க. விற்கு எதிரான அரசியல் இயக்கமாக செயற்படவுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

பன்னீர்செல்வம் சுயநலவாதி. சுயநல அரசியலை மட்டுமே முன்மொழிந்து, அவருடைய ஆதரவாளர்களையும் காப்பாற்றாமல், கட்சியையும் காப்பாற்றாமல், கட்சியின் வீழ்ச்சிக்கும் காரணமாக இருந்தார் என்று குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.



அத்துடன் எந்த கட்சி தொண்டனும் செய்ய துணியாத அளவிற்கு, பொதுக்குழு நடைபெறும் போது கட்சியின் தலைமை அலுவலகத்தை கட்சியின் நிறுவனரான புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். மற்றும் கட்சியை கட்டிக் காப்பாற்றிய புரட்சித்தலைவி ஜெயலலிதா ஆகியோர் பயன்படுத்திய அலுவலகத்தை உடைத்து, அதிலிருந்து ஆவணங்களை அள்ளிச் சென்றமையானது ஏற்றுக் கொள்ள முடியாதது என்ற விமர்சனத்திற்கும் உள்ளானார்.

எடப்பாடி ஆளுமை மிக்க தலைவர் அல்ல. கறைபடியாத கரத்திற்கு சொந்தக்காரர் இல்லை. எனினும், பன்னீர்செல்வத்தின் பலவீனமான அல்லது சாத்தியமற்ற அணுகுமுறையின் காரணமாகவே, கட்சியின் பெரும்பான்மையான நிர்வாகிகளும், தொண்டர்களும் எடப்பாடிக்கு ஆதரவு அளித்துள்ளனர்.

பா.ஜ.க. தலைமைக்கு சாதகமாக பன்னீர் செல்வம் நடந்து கொள்வதாலும், அ.தி.மு.க.வில் பாரிய பிளவை ஏற்படுத்தி, அக்கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்கள் வேறு வழியில்லாமல் பா.ஜ.க. விற்கு ஆதரவு தெரிவிக்க வேண்டிய சூழல் உருவாகும் என்று எடப்பாடியின் ஆதரவாளர்கள் தொடர்ச்சியாக பிரசாரம் செய்து வந்தனர்.

அதனை மெய்ப்பிப்பது போல் அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் என்ற பதவியில் இருந்த பன்னீர்செல்வம், கடந்த ஓராண்டாக தமிழக அரசுக்கு எதிராக தீவிரமான அரசியலை மேற்கொள்ளாமல், எம்.ஜி.ஆர். மற்றும் ஜெயலலிதா ஆகியோர் பொதுவெளியில் செய்ய துணியாத காரியத்தை.. அவரின் வாரிசான மக்களவை உறுப்பினர் ரவீந்திரநாத் மேற்கொள்வதற்கு வழி சமைத்திருந்தார்.

தமிழக முதல்வரான மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்த, ரவீந்திரநாத் சால்வை அணிவித்து, அரசு நன்றாக நடைபெறுகிறது என்று நற்சான்றிதழை வழங்கியதை எந்த அ.தி.மு.க. தொண்டனும் ஏற்றுக் கொள்ள முடியாதவொரு விடயமாகவே கொள்ளப்படுகின்றது.

இந்த நிகழ்வின் பின்னர் தான், பன்னீர்செல்வம் தனது ஆதரவாளர்களிடத்திலிருந்து நம்பிக்கையை இழக்கத் தொடங்கினார். மேலும் கடந்த ஓராண்டில் பா.ஜ.க.வின் வளர்ச்சிக்கு மறைமுக தூண்டுக்கோலாகவும் பன்னீர்செல்வம் செயற்பட்டமையும் அவர் மீது ஒட்டு மொத்தமாக நம்பிக்கை வீழ்வதற்கு வித்திட்டது.

அ.தி.மு.க. செயற்குழு மற்றும் பொதுக் குழு விவகாரத்தில் உச்சநீதிமன்றம் தலையிடுவதற்கு காரணமான பன்னீர் செல்வத்தை அக்கட்சியின் அனைத்து அமைப்பினரும் உறுதியாக எதிர்த்தனர். எடப்பாடியின் அணுகுமுறைகளுக்கு எதிராக இருப்பவர்கள் கூட, பன்னீர் செல்வம் செய்த காரியத்தை ஏற்றுக் கொள்ளத்தயாராக இல்லை.

இதனால் அவரின் அரசியல் எதிர்காலம் என்பது ஏறக்குறைய நிறைவடையும் நிலையை எட்டியுள்ளது. தற்போதைய நிலையில் பன்னீர்செல்வம் புதியகட்சியைத் தொடங்க வேண்டும் அல்லது பா.ஜ.க.வில் இணைய வேண்டும். இவை எதுவும் உடனடி சாத்தியமில்லை என்பதால், பன்னீர்செல்வத்தின் அரசியல் எதிர்காலம் இருள் சூ ழ்ந்து விட்ட நிலையை அடைந்துள்ளது.

கூவத்தூர் சம்பவத்திற்கு பிறகு அரசியலில் ஏற்றம் கண்ட எடப்பாடி, தொடர்ந்து அதே பாணியிலான அரசியலை உறுதியாக பின்பற்றி வருவது ஆரோக்கியமானதா..? என்பதை காலமும், செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்களின் பெரும்பான்மையும் தான் தீர்மானிக்கும். பன்னீர்ச்செல்வத்தின் விவகாரத்தில் அவருக்கும், தி.மு.க. மற்றும் பா.ஜ.க.விற்கும் இடையேயான 'திரைமறைவு உறவு' குறித்து அவர் விமர்சனம் செய்திருந்தாலும், தற்போது நடைபெற்ற அதிகாரப் போட்டி என்பது பன்னீர்செல்வம் மற்றும் எடப்பாடி பழனிச்சாமி ஆகிய இருவருக்கும் இடையேயான தனிப்பட்ட அதிகார போட்டி அல்ல என்றே கொள்ள வேண்டியுள்ளது.(22ம் பக்கம் பார்க்க)



SRI MUTHUMARI AMMAN PRASANNA
ASTROLOGER, PSYCHIC & SPIRITUALIST
Pandit: VISHNU MURTHY
Face Reading, Palm Reading
Horoscope Reading, Date of Birthh

SOLUTIONS & SUGGESTIONS:

Black Magic
Evil Spirits
Jealousy
Health, Wealth
Business, Marriage
Drinking Problem
Love, Divorce
Visa Prob.
Education, Family
Employment, Court
Husband & Wife
Children Problem
Business Prob.
Vasthu Prob
Real Estate
and all other Problems
100% Guarantee
SATISFACTION 100% GUARANTEED
Private & Confidential
இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போதுகனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள் கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசிகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வதிவிடப் பிரச்சனைகள், வெளிநாட்டுப் பயணங்கள், எதிரிகள் கண்ணூறு நாவூறு, கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்.
Specialist in Bringing Back Loved ones
OPEN 7 DAYS
10 AM - 8 PM
Call: 647-390-7388
379 Albion Rd, Unit 1A, Etobicoke, ON, M9W 3P4
Major Intersection: ALBION RD & ELMHURST DR.

SULLIVAN AUTO GROUP'S
Tamil Fest
தமிழர் தெரு விழா
2022
POWERED BY iConnect Mortgages

ஆசியாவுக்கு வெளியே நடைபெறும் மாபெரும் தமிழர் தெருவிழா!




ஒகஸ்ற் 27 & 28
August 27 & 28

Markham Road
(Between McNicoll Ave.
& Passmore Ave.)

தமிழர் பெருமை சொல்லும் வகையில் கலை நிகழ்வுகள், உணவு வகைகள்,
மற்றும் பல பொழுது போக்குகள்!

வர்த்தக அங்காடிகள் அமைக்க விரும்புபவர்கள் தாமதமின்றிக் கனடிய தமிழர் பேரவையுடன்
தொடர்பு கொள்ளவும்: (416) 434-7658 / (647) 676-3965.

TITLE SPONSOR
SULLIVAN AUTO GROUP
BRIMELL TOYOTA | Formula Honda | MORNINGSIDE NISSAN

POWERED BY
iConnect Mortgages | Dominion Lending Centres

HOSTED BY
Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

ZONE SPONSORS
COMPUTEK COLLEGE | HOMELIFE Future Realty Inc. | NAVA WILSON LLP BARRISTERS AND SOLICITORS | Pradon Silks | TD | VIBRANT HOSPITALITY GROUP | WOW! WING HOUSE


COMMUNITY PARTNER
Federation of Tamil Sangams of North America, SINCE 1988

SUPPORTED BY
TORONTO | Canada


MEDIA SPONSORS
ATN ASIAN TELEVISION NETWORK | east FM 102.7 | STARMETROLAND MEDIA

TAMILFEST.CA | TAMILFEST@CANADIANTAMILCONGRESS.CA | 416.240.0078 | @tamilfest


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசி அன்பர்களே! விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். எதிர்ப்புகள் அகலும். பணவரத்து திருப்திகரமாக இருக்கும். பயணங்கள் சாதகமான பலன் தரும். வெளியூ ர் பயணங்கள் ஏற்படலாம். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு வசூலாக வேண்டிய கடன் பாக்கிகள் வசூலாகும். வியாபாரத்தில் மன நிறைவு காண்பீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு அலைச்சலுக்கு பிறகு கடினமான காரியம் கூட கைகூடும்.





ரிஷபராசி அன்பர்களே! மனதில் துணிச்சல் அதிகரிக்கும். எடுத்த காரியங்களை வெற்றியுடன் செய்து முடிப்பீர்கள். எங்கும் எல்லோரிடத்திலும் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். பலரும் உங்களை தேடி வருவார்கள். அடுத்தவர்களுக்காக உதவிகள் செய்வதில் உற்சாகம் உண்டாகும். வழக்கு விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். தொழில், வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். உத்யோகஸ்தர்களுக்கு வேலையில் முன்னேற்றம் ஏற்படும்.





மிதுனராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிக்க இருந்த தாமதம் நீங்கும். கொடுத்த வாக்கை காப்பாற்ற மிகவும் பாடுபட வேண்டி இருக்கும். எனவே யாருக்கும் எந்த வாக்குறுதியையும் அளிக்காமல் இருப்பது நல்லது. அடுத்தவருக்கு செய்யும் உதவிகள் சில நேரத்தில் உங்களுக்கு எதிராகவே மாறலாம். தொழில் வியாபாரம் வேகமாக இருக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். தொழிலை விரிவுபடுத்துவீர்கள்.





கடகராசி அன்பர்களே! மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். சாமர்த்தியமாக செயல்பட்டு காரிய வெற்றி காண்பீர்கள். பணவரத்து அதிகரிக்கும். தொழில் வியாபாரம் சிறப்பாக நடக்கும். வியாபாரம் தொடர்பான பயணங்கள் செல்வதன் மூலம் கூடுதல் லாபம் கிடைக்கப் பெறுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்களின் செயல் திறமை வெளிப்படும். அதனால் மேலதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கப் பெறுவீர்கள்.





சிம்மராசி அன்பர்களே! சுப நிகழ்ச்சிகளில் இருந்து வந்த தொய்வு நீங்கும். மற்றவர்கள் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் நல்லபடியாக நடக்கும். புதிய வீடு வாகனம் சேர்க்கை உண்டாகும். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் சற்று விழிப்புடன் இருப்பது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் அலைச்சலையும், வேலை பளுவையும் சந்திக்க நேரிடும்.




கன்னிராசி அன்பர்களே! எதையும் எதிர்த்து நிற்பதை தவிர்த்து அனுசரித்து செல்வது முன்னேற்றத்திற்கு உதவும். சொத்துக்களை விற்கும்போதும் கவனமாக இருப்பது நல்லது. ஆடை, ஆபரணம் சேரும். தொழில், வியாபாரம் சற்று நிதானமாக நடந்தாலும் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக பணியாற்ற வேண்டி இருக்கும். குடும்பத்தினரிடம் நிதானமாக பேசி அனுசரித்து செல்வது நல்லது.





துலாம் ராசி அன்பர்களே! மனதிடம் அதிகரிக்கும். பணவரத்து இருந்த போதிலும், எதிர் பாராத செலவும் வந்து சேரும். அடுத்தவர்களுக்காக உதவி செய்வது மற்றும் அவர்களுக்காக பரிந்து பேசுவது போன்றவற்றை செய்யும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் வழக்கம் போல் இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்களிடம் கவனமாக பேசி பழகுவது நல்லது. குடும்பத்தினரை அனுசரித்து செல்வது நல்லது. வீண் பேச்சுகளை தவிர்ப்பதும் நன்மை தரும்.





விருச்சிகராசி அன்பர்களே! முயற்சிகள் வெற்றி தரும். சுபசெலவுகள் அதிகமாகும். திடீர் கோபம் ஏற்பட்டு நீங்கும். வீண் பேச்சை குறைப்பது நன்மை தரும். அடுத்தவருக்கு ஜாமீன் கொடுப்பதை தவிர்ப்பது நல்லது. தொழில், வியாபாரம் தொடர்பான விஷயங்களை மற்றவர்களிடம் கூறி ஆலோசனை கேட்பது நல்லது. பங்குதாரர்களிடம் பேசும் போது கவனம் தேவை. குடும்பத்தினரது செய்கைகள் கோபத்தை தூண்டும் படியாக இருக்கலாம். கவனம் தேவை.








தனுசுராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிக்கு எந்த ஒரு காரியத்திலும் லாபம் உண்டாகும். பணவரத்து அதிகரிக்கும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் மூலம் நன்மை உண்டாகும். தொலைதூர தகவல்கள் சாதகமாக இருக்கும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் அடையும். உத்யோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவும் இருக்கும் குடும்பத்தில் உங்கள் சொல்வன்மை அதிகரிக்கும்.




மகரராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் நன்மை உண்டாகும். செய்யும் காரியத்தை சிறப்பாகவும், நேர்மையாகவும் செய்து முடித்து மற்றவர்களிடம் பாராட்டு பெறுவீர்கள். சிலருக்கு உங்கள் செல்வாக்கை கண்டு பொறாமை உண்டாகலாம். எதிர்ப்புகள் விலகும். வீடு மனை சம்பந்தப்பட்ட விஷயங்களில் இருந்து வந்த சுணக்க நிலை மாறும். தடைப்பட்டிருந்த வாகனம் வாங்கும் பணிகள் நிறைவடையும்.




கும்பராசி அன்பர்களே! தைரியம் அதிகரிக்கும். தன்னம்பிக்கை மிளிரும். எடுத்த முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். வாகனங்களில் செல்லும் போதும் ஆயுதங்களை கையாளும் போதும் கவனம் தேவை. நிறைவான லாபம் வரும். தொழில் வியாபரம் தொடர்பான அலைச்சல் இருக்கும். உத்யோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் சொல்படி நடப்பது நல்லது. மேலதிகாரிகள், அனுசரனையாக நடந்து கொள்வர்.




மீனராசி அன்பர்களே! எடுக்கும் காரியங்கள் வெற்றியை தரும். மற்றவர்களது உதவி கிடைக்கும். சாதுர்யமாக பேசி எதிலும் வெற்றி காண்பீர்கள். அனுபவப் பூர்வமான அறிவுத் திறன் அதிகரிக்கும். வழக்குகளில் இருந்து வந்த மந்த நிலை மாறும். தொழில் வியாபாரம் சிறப்பாக இருக்கும். பேச்சாற்றலால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இழுப்பீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் செயல்திறன் அதிகரிக்கும். பதவி உயர்வு புதிய பொறுப்புகள் வந்து சேரும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# அடுத்தது என்ன? என்ன செய்வது?

(17ம் பக்கத் தொடர்ச்சி) முயற்சியில பாதிக் கிணறு தான் தாண்டப்பட்டுள்ளது. அப்படிக் கூடச் சொல்ல முடியாது. காற்பங்கை மக்கள் போராட்டம் கடந்திருக்கிறது. அதிகாரத்தரப்பை அது ஆட்டம் காண வைத்திருக்கிறது என்பது உண்மையே. அப்படியென்றாலும் அது பாதிக்கிணறு தான். பாதிக்கிணறு என்பதை நடுக்கிணறு என்றும் வைத்துக் கொள்ள முடியும். மீதியைக் கடக்கவில்லை என்றால் கிணற்றில் விழுவதாகவே முடியும். அப்படி நேர்ந்தால் எல்லாமே பாழ்.

இப்போது விரைவாகச் செயற்படுத்தப்பட வேண்டியவை புதிய அரசியலமைப்புத் திருத்தம். அது தனியே நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமை நீக்குவதோடு மட்டுப்பட முடியாது. அதற்கு அப்பால், இந்த நாட்டைப் பீடித்துள்ள அத்தனை பிணி, பீடைகள், சிக்கல்களுக்கும் தீர்வைத் தரும் வகையில் திருத்தம் செய்யப்படுவது அவசியம். முக்கியமாக இனப் பாகுபாட்டை மறுதலித்து பன்மைத்துவத் தேசமாக இலங்கையை எடுத்துக் கொண்டு உருவாக்கப்பட வேண்டும். இல்லையென்றால் மீள மீளப் பிரச்சினையும் துயரமுமே நீடிக்கும். இது எல்லாப் பிரச்சினைகளுக்கும் நிவாரணமளிக்க வேண்டிய, தீர்வு காண வேண்டிய சூ ழல். காலமும் அதற்கிணையாகக் கனிந்துள்ளது. இதன் தொடர்ச்சியாக புதிய பொருளாதாரத் திட்டங்கள். மீட்சிக்கான நடவடிக்கைகள்.

இதை மறுதலிக்கும் விதமாக எந்தத் தலைமையாவது, எந்தக் கட்சியாவது சிந்தித்தால் அதற்குத் தண்டனை அளிக்கப்பட வேண்டும். மக்கள் அவற்றை இனங்கண்டு விலக்க வேண்டும். மாயமான்களில் மீள மீள மயங்கி விடக் கூடாது. இதில் சிறுபான்மையினக் கட்சிகளும் மக்களும் இன்னும் அதிக விழிப்போடும் பொறுப்போடும் செயற்படுவது அவசியம்.

எதையும் திருத்தம் செய்ய முடியாது. சமாளிப்புகளால் நிலைமையை சுமுகமாக்கலாம் என்று நினைத்தால் அது மீளவும் ஒரு வரலாற்றுத் தவறாகவே அமையும். இலங்கையை மீளக் கட்டியெழுப்ப வேண்டும். புதிய அரசியல் சாசனத்தினால், ஆட்சி முறையினால், அரசியற் சிந்தனையினால், அரசியற் பண்பாட்டினால், மக்களின் வாழ்க்கையினால்... இப்படிப் பல வழிகளில்.

யுத்த காலத்தை விட யுத்தத்தின் போது சந்தித்த நெருக்கடிகளை விட இப்போது தான் நெருக்கடியும் ஆட்சித் தவறுகளும் அதிகமாகி உள்ளன. இது ஏன்? என்று நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். இவற்றைக் குறித்து பரபரஸ்பரம் எல்லோரும் வெளிப்படையாகப் பேச வேண்டும். புதிய வாழ்க்கை எமக்கு வேண்டுமென்றால், புதிய சிந்தனை அவசியம். புதிய ஆட்சி அவசியம். புதிய தலைமைகள் அவசியம். புதிய முகங்கள், புதிய கரங்கள், புதிய களச் செயற்பாட்டாளர்கள் அவசியம். காலம் அதற்காகக் காத்திருக்கிறது. தேசத்தாய் தன் புதல்வர், புதல்வியரை நோக்கி மடி விரித்திருக்கிறாள். வருக தோழ, தோழியரே

# இந்தியாவுக்கு அருகில் ஒரு கிளர்ச்சியா?

(19ம் பக்கத் தொடர்ச்சி) புலிகளின் வீழ்ச்சியை தொடர்ந்து ராஜபக்சக்களால் தலைமை தாங்கப்பட்ட சிங்கள பௌத்த தேசியவாதம் தென்னிலங்கையை முற்றிலுமாகவே ஆக்கிரமித்திருந்தது. பொருளாதார நெருக்கடியின் காரணமாக தற்போது சிங்கள பௌத்த தேசியவாதம் நெருக்கடியை சந்தித்திருக்கின்றது. இந்தப் பின்னணியில் தான், இடதுசாரித்துவ செல்வாக்கிற்குட்பட்ட மாணவர்கள் மற்றும் இடதுசாரி அமைப்புக்கள் மீளவும் முன்னணிக்கு வந்திருக்கின்றனர். இந்த பின்புலத்தில் தான் ஒரு கேள்வி எழுகின்றது — அதாவது, தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் கிளர்ச்சியின் இலக்கு என்ன? 1971 மற்றும் 1989இல் ஜே.வி.பியால் முடியாமல் போனதை இவர்கள் மீளவும் புதியதொரு வழிமுறையால் சாதிக்க முற்படுகின்றனரா? இந்தியாவின் கொல்லைப்புறத்தில் இடம்பெறும் இவ்வாறானதொரு கிளர்ச்சி தொடர்பில் இந்தியா எதுவரையில் அமைதியாக இருக்க முடியும்?

இந்தியாவின் உடனடி அயல்நாடொன்றில் ஏற்பட்டிருக்கும் அரசியல் கொந்தளிப்புக்கள், இந்தியாவின் உள்ளக அரசியலிலும் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியது. ஆனால் தற்போது ஏற்பட்டிருக்கும் கிளர்ச்சி எதுவரையில் செல்லும்? கிளர்ச்சியாளர்கள் அனைத்தையும் தங்கள் வசப்படுத்தினால், அது தெற்காசிய அரசியலில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தும்?

அதே வேளை, இலங்கையின் ஆட்சியாளர்கள் அகற்றப்பட்டிருக்கும் முறைமையானது, தெற்காசியாவின் ஏனைய நாடுகளிலும் தொற்றலாம். இந்த நிலையில், இந்தியாவின் எதிர்வினை என்னவாக இருக்கப் போகின்றது? இலங்கையின் தென்பகுதியின் கிளர்ச்சியில் ஈழத் தமிழர்கள் பார்வையாளர்களாக மட்டுமே இருக்கின்றனர். இது பிறிதொரு செய்தியாகும்.

# அ.தி.மு.க.வை கைப்பற்றிய எடப்பாடி!

(20ம் பக்கத் தொடர்ச்சி) இதேதருணத்தில் தற்போது அ.தி.மு.க. வின் ஒற்றை தலைமையாக உயர்ந்தி ருக்கும் எடப்பாடி மீதான கொடநாடு கொலை, கொள்ளை வழக்கு விவகாரம் எப்போது வேண்டுமானாலும் அவருக்கு எதிராக திரும்பக் கூடும். அவர் கைது செய்யப்படக்கூடும். அதன் போது அ.தி.மு.க.வை வழி நடத்துபவர்கள் யார்? என்ற கேள்வி எழும். இந்நிலையில் தான் எடப்பாடி கட்சியின் இடைக்கால பொதுச்செயலாளராக தெரிவு செய்யப் பட்டிருக்கிறார். மேலும் தி.மு.க., அ.தி.மு.க. என்ற இரு முனை அரசியல் ஆட்சியதிகாரம் கொண்ட திராவிட கட்சிகளின் கடந்த ஐம்பது ஆண்டு கால ஆட்சியில், தமிழகம் பல துறைகளில் முன்னேற்றம் கண்டிருக்கிறது. குறிப்பாக சமூக நீதி, பெண்கள் மேம்பாடு ஆகிய இரண்டு விடயத்தில் தமிழகத்தின் முன்னேற்றம், திராவிட சிந்தனை கொண்ட ஆட்சியாளர்களால் தான் நிறைவேறியது. எனவே இதற்கு எதிர்காலத்தில் ஒரு போதும் ஆபத்து ஏற்படாத வண்ணம், தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. ஆகிய இரண்டு அரசியல் இயக்கங்களை சேர்ந்த தலைவர்கள், கொள்கை ரீதியாக வேறுபட்டு இருந்தாலும், தமிழக மக்களின் நலன்களுக்காக ஒருமித்த குரலில் செயற்பட வேண்டியுள்ளது.

1967ஆம் ஆண்டில் ஆளுங்கட்சியாக இருந்த காங்கிரஸ், தி.மு.க.விடம் தோல்வி அடைந்து, தி.மு.க.வின் கூட்டணி அரசியலில் இயங்கி வருகிறது. இதே போன்றதொரு நிலை எதிர்காலத்தில் அ.தி.மு.க.விற்கும் ஏற்படக்கூடும். ஏனெனில் அக்கட்சி பா.ஜ.க.வுடன் தேர்தல் கூட்டணியாக இல்லாமல் கொள்கை ரீதியான கூட்டணியுடன் செயல்பட்டு, இந்துத்துவம் மற்றும் தேசியம் குறித்த அரசியலைப் பேசி, அக்கட்சி காங்கிரஸ் கட்சியை போல் கரைக்க முயற்சிக்கிறது. இதனால் தான் அமித்ஷா, மோடி உள்ளிட்ட தலைவர்கள் தமிழகத்தில் பய ணம் மேற்கொள்ளும் பொழுது, தி.மு.க. விற்கும், பா.ஜ.க.விற்கும் இடையே தான் போட்டி என்றதொரு விடயத்தை முன் வைக்கிறார்கள். இதனை அ.தி.மு.க.வின் இடைக்கால பொதுச்செயலாளர் எதிர்கால பொதுச் செயலாளரான எடப்பாடி தன்னாட்சி அதிகாரம் பெற்ற அரசியல் இயக்கமாக அ.தி.மு.க. இயங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு வலுத்துள்ளது.


TITLE SPONSOR
SIVAGURU
CUSTOM HOMES INC
An Event By
ARYA
CANADA INC
RADIO PARTNER
east
FM 102.7
SATURDAY
SUNDAY
கோடையில்
RAAgA fest
LIVE MUSIC
—with MANI & BAND
மாபெரும் இன்னிசைப் பெருவிழா
POWERED BY SPONSOR
Neujan
REALTOR
MUTHIAH
FOR NEW GEN
POWERED BY SPONSOR
HIMELFARB PROSZANSKI LLP
Personal Injury Lawyers
CO-SPONSOR
MT CPA CA
MAYURAN THARMABALAN
PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
KINGS CORNER
SPORTS BAR & GRILL
PLATINUM
Ai HR Solutions Inc.
GOLD
PUMPKINKART
Delivering Happiness
DYNEVOR EXPRESS
YTI CHARTER
VIP CUISINE EXPERIENCE
SOUTHERN AROMA
PRINTING PARTNER
INK DRIP
GROUP OF COMPANIES
GATES OPEN 3 PM SHOW STARS 5 PM
COMMUNITY PARTNER
MR.TAMIL Canada
SUPPORTING PARTNERS
Netwyn.Place
TORBRAM
FIRE PROTECTION
Vijay Selvarajah,
B.Com, CPA, CGA, Mortgage Agent
MORTGAGE ALLIANCE
Access Inc.
N
MARKHAM ROAD
REESOR ROAD
STEELES AVE E
PARKING
PARKING
14TH AVE
11TH CONCESSION
VENUE | இடம்
8100 STEELES AVE
(STEELES & REESOR RD)
MARKHAM MEADOW
FOR PARKING ENTRY USE
14TH AVENUE & 11 CONCESSION
UNIQUE VIP EXPERIENCE WITH FOOD & DRINKS
SATURDAY 06
AUGUST 2022
SUNDAY 07
Ticket Hotline
647 848 1342
FREE PARKING
MASK Recommended
aryacanInc
aryacanadainc
www.aryacanadainc.com
Ticket Online
PUMPKINKART
www.pumpkinkart.com/download

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்

வீடு வாங்க.. விற்க..

Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200

HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6



RANJANI THIRUKESWARAN LAW OFFICE





- Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
- Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
- Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
- Family Law: குடும்ப வழக்குகள்
- Last Wills: உயில் தயாரித்தல்
- Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்

2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242

Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)



மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி

NON-MEDICAL INSURANCE

நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!



ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca

KABIS

- Life Insurance
- Critical Illness
- Disability
- RESP
- RRSP
- Mortgage Protection Insurance
- Travel Insurance (Super Visa)

Foresters IA Industrial Alliance Assumption Life



OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST

HOMELIFE

ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001

TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*





RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES


$599* FLAT RATE

Aalayaa

2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500

அபாயம் உண்மையாகலாம்.

சிக்கல் நிறைந்த ஆபத்தான நோய்க்கு நீங்கள் ஆளாகும்போது தகுந்த நிதி உதவிகளைப் பெற்றுத் தர வைக்கும் தேவை எங்களுக்கு உண்டு என்பதை இங்கு காணுங்கள்.



புள்ளி விபரங்கள் சொல்வதென்ன?

| In Canada | |
| --- | --- |
| Breast Cancer | 1 woman in 8 |
| Prostate Cancer | 1 man in 7 |
| Heart disease | 1 person in 4 |
| Stroke (CVA) | 1 person in 20 |


Fortunately, more people are surviving these afflictions and living longer lives.

| Survival Rate | |
| --- | --- |
| Cancer | 60% |
| Heart Attack | 85% |
| Stroke | 1 person in 4 |

Over $63 million has been paid in critical illness benefits to help people preserve their finances while they focus on making a healthy recovery.

- Average benefit paid : $56,000
- Average age of people diagnosed: 49 years

BENEFITS PAID BY GENDER Women 54% Men 46%




iA Financial Group

AJITH SABARATNAM
647-401-5800 / 416-439-2800
10 Thornmount Dr, Scarbrough, Ont, M1B 3J4.

